விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 20 வெள்ளிக்கிழமை (02.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 135




## இல. மனித உரிமை நிலைமைகள் உன்னிப்பாக அவதானிக்கப்படும்

### யப்பான், ஐரோ. ஒன்றியம் கூட்டாக அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசியல் ரீதியான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றபோதும் அங்குள்ள மனித உரிமை நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் யப்பான் ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

டோக்கியோவில் கடந்தவாரம் நடைபெற்ற ஜப்பான்–ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டின் இறுதியில் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மற்றும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழு ஊடாக முன் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன

### அமெரிக்க அரசாங்கம் கவலை

(வாஷிங்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் பொதுமக்களை இலக்கு வைத்துத் தாக்குதல்களை நடத்துகின்றபோதும் விடுதலைப்புலிகளை நசுக்குவதற்காகத் துணை இராணுவக் குழுக்களை அரசாங்கம் பயன்படுத்துகின்றது என்ற சந்தேகம் தோன்றியிருப்பதாக அமெரிக்கா வெளியிட்டுள்ள 2007 ஆம் ஆண்டுக்கான பயங்கரவாதம் தொடர்பான வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த 2002 இல் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கையில் பாரிய வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதுடன் பெருமள *(10 ஆம் பக்கம் பார்க்க)*

# ஐ.தே.கவுக்கு அளிக்கும் வாக்குகள் பிரபாகரனுக்கு சொந்தமானவையாகும்

## மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி உரை



(கொழும்பு)

**கிழக்கு மாகாண தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் அளிக்கின்ற ஒவ்வொரு வாக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் போடும் வாக்காகும். அரசுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் படையினர் வடக்குக்குச் செல்வதற்கான வாக்காகவே அமையும். இதனால் எதிர் வரும் 10 ஆம் திகதி கிழக்கு மாகாண மக்கள் சரியான தீர்ப்பினை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை அரசாங்கத்திடம் உள்ளது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.** ***(10 ஆம் பக்கம் பார்க்க)***

## வடக்கு மாகாணத்துக்கென சிறப்புச் செயற்பாட்டுக்குழு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கு என்று புதிய சிறப்பு செயற்பாட்டுக்குழு ஒன்றை அமைக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் முன்வைத்த பிரேரணை ஒன்றுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை கூடிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தக் குழுவின் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா ,றிசாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளில் வட மாகாணத்துக்கென்று ஒரு இடைக்கால சபை ஒன்றை நிறுவ வேண்டும் என்ற பரிந்துரைப்படி நிறுவப்படக் கூடிய இடைக்கால நிர்வாக சபைக்கான ஒரு முன்னோடியாக இந்தக் குழு அமையும் என்று *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## கிளைமோர்த் தாக்குதலில் 2 அதிரடிப் படையினர் பலி

(கொழும்பு)

மணலாறுப் பிரதேசத்தில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இரண்டு அதிரடிப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாகப் படைத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதல் நேற்றுக் காலை 6.45 மணிக்கு நடத்தப்பட்டுள்ளது. வவுனியா மற்றும் திருகோணமலை எல்லையோரங்களில் சிங்களக் குடியேற்றப் பகுதிகளுக்குப் பாதுகாப்பாகச் சிறப்பு அதிரடிப் படையினர் நியமிக்கப்பட்ட பின்னர் வன்னிக் களமுனையில் முதல்முறையாகக் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கை விவகாரத்தில் இந்தியா மீண்டும் தலையிட வேண்டும்

### பண்ருட்டி ராமச்சந்திரன்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தலையிட்டு இரு தரப்புக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்த முன் வரவேண்டும் என்று தமிழக முன்னாள் அமைச்சரும் மூத்த அரசியல்வாதியுமான பண்ருட்டி ராமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்தில் ஒரு சுமுகமான தீர்வு ஏற்படும் வகையில் இந்தியா தலையீடு செய்ய வேண்டும் என்று தமிழக சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. அதனையடுத்து இந்திய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவரான ராஜ்நாத் சிங் கூட இதே வகையான கருத்தைச் சில நாள்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

அந்த நிலையிலேயே இராமச்சந்திரன் அவர்களின் இந்தக் கருத்தும் வந்துள்ளது. இன்று *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## மணலாற்றில் மோதல் இரண்டு படையினர் பலி

(கிளிநொச்சி)

மணலாற்றில் ஜனகபுர வடக்கில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் படையினர் இருவர் கொல்லப்பட்டனர். இம்மோதல் புதன்கிழமை முற்பகல் நிகழ்ந்ததாகவும் படையினர் இருவர் கொல்லப்பட்டும் ஒருவர் காயமடைந்தும் இருப்பதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணலாற்றில் விடுதலைப் புலிகளின் பொறிவெடியில் நேற்று முன்தினம் முற்பகல் 11.20 மணிக்கு சிக்கிய படைத்தரப்பை சேர்ந்த *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## யுத்தத்தை நடத்துவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தின் மூலம் மட்டும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இயலாத காரியம்.பயங்கரவாதத்தையும் யுத்தத்தின் மூலமாக மட்டும் ஒழித்து விட முடியாது. இந்த நிலைப்பாட்டினையே மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கொண்டிருந்தார் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அன்று மனித உரிமைகள் மீறப்படுவதாக கறுப்புப் பட்டியணிந்து குரல் கொடுத்தவர்கள் இன்று மௌனமாகியுள்ளதுடன் விமர்சனங்களையும் கைவிட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் 15–வது நினைவஞ்சலி நிகழ்வு நேற்று வியாழக்கிழமை கொழும்பு புதுக்கடையில் உள்ள அன்னாரது *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## பேச்சுவார்த்தையே சரியான பாதையென இ.தொ.காவே வலியுறுத்தி வருகின்றது

### அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வாகாது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமாதானப் பேச்சுவார்த்தையே சரியான பாதையாகும் என்பதை இ.தொ.கா. மட்டுமே தொடர்ச்சியாக அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருகின்றது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

நாட்டை வீணடித்துக் கொண்டிருக்கும் யுத்தம் தொடர்பில் எந்த மலையகத் தலைவரும் வாய் திறப்பதேயில்லை. பதவி பறிபோய்விடும் என்பதனாலேயே எவரும் வாய் திறப்பதற்குத் தயங்குகின்றனர்.

ஆனால் இ.தொ.கா. மட்டுமே துணிந்து குரல் கொடுக்கின்றது என்றும் அவர் கூறினார். இ.தொ.காவின் மேதினக் கூட்டம் நேற்று அட்டன் பிர *(10 ஆம் பக்கம் பார்க்க)*

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# நீதிச் சேவை ஆணைக்குழுவின் முடிபின்படி கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன

# யாழ்.மாவட்ட நீதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சட்டத்தரணிகளின் விவகாரம் குறித்த பத்திரிகை ஒன்றில் வெளி வந்த செய்தியை அடுத்தே நீதிச்சேவை ஆணைக் குழு தலையிடவேண்டி ஏற்பட்டதாக யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா தெரிவித் துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகை யாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த நவம்பர் மாதம் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தியின் பிரகாரமே இப்பிரச் சினை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான நீதிச்சேவை ஆணைக் குழுவுக்கு சென்றது.

இதனால் இது தொடர்பான முடிபினை நீதிச் சேவை ஆணைக்குழுவே வழங்க வேண்டி வந்தது.

அல்லாவிடின் யாழ்.மேல் நீதிமன்ற நீதி பதியும் யாழ்.மாவட்ட நீதிபதியுமே தீர்மா னித்து சட்டத்தரணிகளின் கோரிக்கையை தீர்த்து வைத்திருக்க முடியும்.

கடந்த மார்ச் மாதம் 5ஆம் திகதி கௌரவ யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ணராஜ் அவர்களை சட்டத்தரணிகள் சங்கத் தலைவி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தலை மையில் சட்டத்தரணிகள் சந்தித்து தமது தேவைகளை தெரிவித்திருந்தனர்.

இதற்கமைவாக அவர்களின் தேவையை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி, நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலம் அனுப்பி வைத்தார்.

அதற்கான பதிலை நீதிச் சேவ்வகள் ஆணைக்குழுவின் செயலாளர் பி.டபிள்யூ. டி.சி.ஜெயதிலக, பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான நீதிச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படியும் பணிப்புரைக்கமைவாகவும் யாழ்.மாவட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதியில் சட்டத்தரணிக ளுக்கான அறையினை நீதிபதிகளை தீர்மா னிக்கும்படி கடிதமூலம் மேல் நீதிமன்ற நீதி பதி பி.சுவர்ணராஜ், பிரதி யாழ்.மாவட்ட நீதி பதியாகிய எனக்கு அனுப்பி வைத்தனர்.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் கடிதத் தின் பிரகாரம் மேல் நீதிமன்ற நீதிபதியும் நானும் சகோதர நீதிபதி எஸ்.வசந்தசேன னும் ஆராய்ந்து சட்டத்தரணிகளின் தேவை களை அவர்களின் நீதித்துறையின் சேவை யின் ஓர் அங்கம் என மதிப்பளித்து விருப் பப்படி நிறைவேற்றுகின்றோம்.

இத்துடன் இத் தீர்மானத்தை (இன்று) மாலை அறிவிக்க வேண்டி ஏற்பட்டதன் காரணம், யாழ்.மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கு விசாரணைகளுக்கு கொழும் பில் இருந்து சட்டத்தரணிகள் வந்திருந்தமை யால் அவ்வழக்கு விசாரணைகள் முடிந்த பின்பே அறிவிக்கின்றோம்.

இவ்வாறு யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்ன ராஜா தெரிவித்தார். (ச-5)

## அனல் மின் நிலையத்துக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு

இந்தியாவின் உதவியுடன் திருகோணம லை மாவட்டம் மூதூர் கிழக்கு பிரதேசத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அனல் மின் உற்பத்தி நிலையத்திற்கு அந்த பிரதேச குடியிருப்பாளர்கள் தமது எதிர்ப்பை வெளிப் படுத்தியுள்ளார்கள். 2006ஆம் ஆண்டு அந்த பிரதேசத்தில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக அங்கிருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் இன்னமும் தங்கியிருக்கின் றனர். (ச)



யாழ்.நீதிமன்றக் கட்டடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ணராஜ், யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா மற்றும் சட்டத்தரணிகளைப் படத்தில் காணலாம். (ச-3,5)

# தமிழகத்தில் கருணா குழு ஊடுருவல் இந்திய அரசு திடீர் எச்சரிக்கை

(சென்னை)

தமிழக தலைவர்களை கடத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பழிபோடுவதற்காக கருணா குழு தமிழ்நாட்டில் ஊடுருவ வாய்ப்பு இருப்பதாக இந்திய அரசு திடீர் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் தினத்தந்தி நாளேட்டில் நேற்று வெளியா கியுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது,

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் கருணா குழுவினர் ஊடுருவ வாய்ப்பு இருப்பதாக மத்திய உளவுப்பிரிவு பொலி ஸார் எச்சரித்துள்ளனர். இதனால் தமிழகம் முழுவதும் பொலிஸார் உசார் படுத்தப்பட் டுள்ளனர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக் கும் இராணுவத்துக்கும் இடையே கடும் போர் நடந்து வருகிறது. விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவ முகாம்கள் மீது வான் தாக்குதலை நடத்தி வருகிறார்கள்.

இந்தப் போரில் நாளாந்தம் நூற்றுக் கணக்கானோர் மடிகிறார்கள். பொதுவாக இலங்கையில் போர் பெரிய அளவில் நடக் கும்போது தமிழகத்திற்கு இலங்கையி லிருந்து அகதிகள் அதிக அளவில் வருவது வழக்கம்.

அகதிகள் அதிக அளவில் வரும்போது அவர்களோடு சேர்ந்து விடுதலைப் புலிக ளும் ஊடுருவ வாய்ப்புக்கள் உண்டு. இத னால் தற்போது தமிழக கடலோர மாவட்டங் களில் பொலிஸார் உசார் படுத்தப்பட்டுள் ளனர்.

கடலிலும் கடலோர பாதுகாப்பு படையி னர் தீவிர சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டுள் ளனர். தமிழகத்துக்குள் வரும் இலங்கைத் தமிழ் அகதிகள் பலத்த சோதனைக்கு பிறகே அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்த நிலையில் மத்திய உளவுப் பிரிவுப் பொலிஸார் ஒரு அதிருப்தியான எச்சரிக்கை தகவலை தமிழக பொலிஸாருக்கு அனுப்பி வைத்துள்ளனர். அந்தத் தகவலில், இலங் கையிலிருந்து விடுதலைப் புலிகளின் கருணா பிரிவினர் தமிழகத்துக்குள் ஊடுருவ வாய்ப்பு இருப்பதாகவும் அவ்வாறு ஊடுருவும் கரு ணா பிரிவுப்புலிகள் தமிழகத்தில் வசிக்கும் முக்கிய தலைவர்களை கடத்திச் சென்று மிரட் டுவதற்கு வாய்ப்பு உள்ளது.

விடுதலைப் புலிகள் மீது இந்தப் பழி யைப் போட்டு அவர்களுக்கு கெட்ட பெயரை உண்டாக்கி, போரில் அவர்களின் கவனத்தை திசை திருப்ப இந்தச் சதிச்செயலை அரங் கேற்றலாம் என்று எச்சரிக்கை தகவலில் கூறப்பட்டுள்ளது என்ற அதில் கூறப்பட்டுள் ளது. (எ-5)

# 'எக்ஸ்பிறஸ்' கல்வி நிறுவனத்தில் நாளை மாணவர் கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இருபாலை 'எக்ஸ்பிறஸ்' கல்வி நிறுவனத் தில் கற்று கடந்த ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு கல்வி நிறுவனத் தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன சிரேஷ்ட ஆசிரியர் ந.மோக நேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போத னா வைத்தியசாலை டாக்டர் வைத்திய கலா நிதி சி.சிவகோணேசன், வைத்திய கலாநிதி தாரணி சிவகோணேசன் தம்பதியர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் மற்றும் இருபாலை கற்பக விநாயகர் ஆலய பிரதம குரு ஆகியோர் ஆசியுரை வழங்க நிறுவன அதிபர் தொடக்கவுரை ஆற்றுவார்.

இலங்கை வங்கியின் வட மாகாண உத விப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமை நாயகம், ஓய்வு பெற்ற வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணி யம், கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன் றாஸ், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம், ஆசிரியர் என்.விஜயசுந் தரம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளை, வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா, இலங் கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் என்.சீவரட்ணம், ஆசிரியர் ஞான.திருக்கேதீஸ்வரன் ஆகியோர் பாராட்டு ரைகளை வழங்குவர். (எ)

## அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலக புதிய கட்டடத் திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று நண் பகல் 12 மணிக்கு பிரதேச செயலர் மஞ்சுளா தேவி தலைமையில் நடைபெறும். அடிக்கல் லினை யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் நாட்டிவைப்பார். (எ)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சைவமணி சி.மருதபிள்ளையின் ஓராண்டு நினைவு நிகழ்வும், 'சைவமணி' நூல் வெளி யீட்டு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்க மண்டபத்தில் நடை பெறும்.

வட்டு. இந்து வாலிபர் சங்கத் தலைவர் க.சுகாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ் வில் பிரார்த்தனை உரையை சிவஸ்ரீ நா.சர் வேஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார்.

நூல் வெளியீட்டுரையை வலம்புரியின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் நினை வுப் பேருரையை செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனும் நிகழ்த்துவர். (எ)


## ஜனசக்தி சனசமூக நிலையம்

## பாராட்டி வாழ்த்துகிறது

நடந்து முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திய டைந்த எமது நிலைய உறுப்பினர்களான;

**செல்வி தம்பித்துரை மடோனா**
**செல்வி பசுபதி தர்சிகா**
**செல்வி திருநாவுக்கரசு தட்சாயினி**
**செல்வி பாஸ்கரன் லேஜா**
**செல்வி மோகன் லதீனா**
**செல்வி இரவீந்திரபாபு சுபேதிகா**
**செல்வன் உதயகுமார் வினோத் வியூஷணன்**
**செல்வன் யோகநாதன் யசோதரன்**

ஆகியோரை எமது அயல் வாழ் மக்கள் சார்பிலும், எமது நிலையத்தின் சார்பிலும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஜனசக்தி சனசமூக நிலையத்தினர்.**

**அரசடி வீதி,**
**நல்லூர்.**

(1139)


# இலங்கையில் அதிகரிக்கும் மோதல்களால் இந்தியா செல்லும் அகதிகள் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

இங்கையில் அதிகரித்திருக்கும் வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து இந்தியாவுக்குச் செல் லும் ஈழத்தமிழ் அகதிகளின் எண் ணிக்கை அதிகரித்து இருப்பதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள் ளார்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் இரா ணுவத்தினருக்கும் இடையிலான மோதல்களால் பாதிக்கப்பட்டுள் ளோம் என்பதை அடையாளப் படுத்தக் கூடிய ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை 37 ஈழத்தமிழ் அகதிகள் தமிழக கரையோரத்தை சென்றடைந்திருப்பதாக தெரிய வருகிறது.

ஒவ்வொருவரும் இந்தியா வரு வதற்கு 10 ஆயிரம் ரூபாய்களை கொடுத்துள்ளனர்.

37 பேரும் இரண்டு மீன்பிடி படகுகளில் அரிச்சல்முனை கடற் கரையோரத்தை வந்தடைந்தனர் என தமிழ்நாட்டின் கியூ கிளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் வடக்குப் பகுதி யில் மோசமடைந்திருக்கும் சூழ் நிலையாலேயே ஈழத் தமிழ் அகதி களின் இந்திய வருகை மேலும் அதிகரித்துள்ளது.

எனினும் அவர்கள் மோதல்க ளால் பாதிக்கப்பட்டவர்கள் என்ப தை அடையாளம் கண்டு கொள்வ தற்கான வழிகள் எதுவும் இல்லா மல் உள்ளது என கரையோர பாது காப்பு அதிகாரி ஒருவர் கூறியுள் ளார். (அ)

## கணிதபாட செயல்நூல்

(அல்வாய்)

தரம்-2 கணித பாட செயல் நூல் பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்திற்கு கிடைத்துள்ளது.

தேவையான அதிபர்கள் உடன் கோட்டக் கல்வி அதிகாரிக ளுடன் தொடர்பு கொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப் பாளர் வ.செல்வராசா அறிவித் துள்ளார். (ஓ-19)

# இன்று ஒரு தகவல்

## பாராட்டு

ஏதாவது ஒரு வேலை கிடைத்தால் போதும் என அலைந்துகொண்டிருந்தான் ஒருவன். ஓர் இடத்தில் அவனுக்கு ஒரு வேலையும் கிடைத்தது. சில நாட்கள் கழித்து அவனைப்பார்த்தேன். ''இப்ப வேலையை விட்டால் போதும் என்று நினைக்கிறேன் என்றான் அவன். என்ன விசயம் என்று விசாரித்தேன்."

"என்ன சார் செய்வது, எனக்கு மேலேயுள்ள அதிகாரி ஒரு சிடுமூஞ்சி. எதற்கெடுத்தாலும் கோபப்படுகிறான். அனுசரித்துப் போவது சரியான கஷ்டமாயிருக்கிறது. அதுதான் அந்த இடத்தைவிட்டு விலகிவிடலாமா? என்று யோசிக்கிறேன்" என்றான் அவன்.

இப்படி அவன் சொன்னதைக் கேட்டதும், ஏற்கனவே நான் படித்த ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. அதை அவனிடம் சொன்னேன். அது என்னவென்றால், நியூயோர்க்கில் ஒரு மருத்துவ நிபுணர் இருந்தார். ஒரு நர்ள் அவரைத்தேடி ஒரு பெண் வந்தாள்.

"டாக்டர் உங்களிடம் ஒரு முக்கியமான ஆலோசனை கேட்கவந்தேன்" என்றாள் அந்தப்பெண். "என்ன விஷயம்?" என்று விசாரித்தார் அவர். டாக்டர், நான் ஒரு தொழிற்சாலையில் தலைமை அதிகாரியின் சுருக் கெழுத்தாளராக வேலை பார்க்கிறேன். அந்த அதிகாரி ஒரு சிடுமூஞ்சி! எதற்கெடுத்தாலும் கோபப்படுவார். இதனால் ராத்திரியில் தூங்கவும் முடியவில்லை. அந்தளவுக்கு வேதனையாக இருக்கிறது. ஆனபடியால், அந்த வேலையை விட்டு விடலாம் என நினைக்கிறேன் என்றாள் அவள்.

அந்த நிபுணர் இந்தப் பெண் சொல்வதையெல்லாம் கவனமாகக் கேட்டார். பின், ''நான் ஒரு யோசனை சொல்கிறேன். அதன்படி நடந்துகொள். அதற்குப்பின் என்னிடம் வா. ராஜினாமா பண்ணலாமா? வேண்டாமா? என்பதைப்பற்றி யோசிப்போம்" என்றார். "என்ன செய்யலாம் சொல்லுங்க!'' என்று கேட்டாள் அந்தப்பெண். அதற்கு அந்த நிபுணர் ஒரு யோசனை சொன்னார்.

''எந்தவொரு கோபக்காரனாய் இருந்தாலும் அவனிடம் சில நல்ல குணங்கள் பதுங்கியிருக்கும். அதையெல்லாம் தேடிக்கண்டுபிடித்துப் பாராட்டு ஒரு நாளைக்கு ஒரு முறையாவது பாராட்டு இப்படி தொடர்ந்து செய்பார்க்கலாம்" என்று கூறி அனுப்பினார்.

அந்தப் பெண் வழக்கம்போலவே அலுவலகத்திற்குச் சென்றாள். சுருக்கெழுத்து எழுதுவதற்காக தன்னுடைய அதிகாரியின் அறைக்குப் போனாள். அந்த அதிகாரி போட்டிருந்த சட்டை அழகாக இருந்தது. ''சார் உங்களுடைய சட்டை அழகாக இருக்கிறது" என்று மன தாரப் பாராட்டினாள்.

அடுத்தநாள் அவருடைய ஆங்கில எழுத்து நடையைப் பாராட்டினாள். இப்படி தினமும் ஒரு பாராட்டு. பாராட்டு ஏற ஏற அவரது சிடுமூஞ்சித்தனம் வெகுவாகக் குறைய ஆரம்பித்தது. மூன்று மாதம் கழிய அந்தப் பெண் மறுபடியும் அந்த மனநல மருத்துவ நிபுணரிடம் வந்தாள்.

''வேலையை ராஜினாமா பண்ணலாமா?'' என்று கேட்டார் அந்த நிபுணர். "அது எப்படி முடியும்?" என்றாள் அந்தப்பெண்.

"ஏன்?" என்று கேட்டார் அவர்.

''நான் அவரைக் கல்யாணம் செய்யப்போகிறேன். இப்போது அவர் என்னுடைய காதலர். நான் போட்டிருக்கும் இந்த வைர மோதிரத்தைக்கூட அவர்தான் எனக்குப் பரிசளித்தார்." என்றாள் அவள் வெட்கத்துடன்.

கொஞ்ச நாளில் அவர்களிருவரும் திருமணம் செய்து கொண்டார்களாம். இதுதான் நான் படித்த செய்தி. இதை என்னிடம் வந்த நம்ம ஆளிடம் கூறினேன். அவன் கொஞ்ச நேரம் யோசித்தான். பிறகு, சார் நானும் எனது முடிவை மாத்திக்கப்போறேன். இதே அணுகு முறையைக் கடைப் பிடிக்கப் போறேன்.

எனக்கு மேலே இருக்கிறானே ஒரு சிடுமூஞ்சி. அவனை கூடிய சீக்கிரம் மாத்தலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. உங்க யோசனைக்கு ரொம்ப நன்றி. ஒரு மூணு மாசம் கழிச்சு நானும் ஒரு கல்யாணப்பத்திரிகையோட உங்களை வந்து சந்திக்கிறேன் என்றான்.

"அது எப்படி?" என்றேன் ஒன்றும் புரியாமல்! "அந்த சிடுமூஞ்சிக்கு ஒரு பொண்ணு இருக்கு சார். என் கூடதான் படிச்சது. நான் அவனிடம் வேலைக்குச் சேர்ந்ததே அதுக்காகத்தான் சார்." என்றான் அசடு வழிய!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மலையகத்துக்கு சுயாட்சி அலகு வேண்டும்

## மலையக மக்கள் முன்னணி - மேதினப் பிரகடனம்

### ம.ம.மு.மற்றும் ம.தொ.மு.வின் மேதினப் பிரகடனம்

(பதுளை)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வில் மலையகத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் பிரதிபலிக்கும் வகையில் இம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை ஒருங்கிணைத்து சுயாட்சி அலகொன்று உருவாக்கப்படல் வேண்டும் எனக் கோரும் பிரகடன மொன்றை மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையகத் தொழிலாளர் முன்னணி மேதினப் பிரகடனமாக விடுத் துள்ளது.

தொடர்ந்தும் மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையகத் தொழிலாளர் முன்னணி விடுத்திருக்கும் பிரகடனங்கள் தொழிலாளர் உரிமை, அரசியல் உரிமை, சமூகம், கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு, பொருளாதாரம் என வகைப்படுத்தப்பட்டு 44 பிரகடனங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

பெருந்தோட்டத்துறை பிரச்சினைகளை ஆராய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவில், தோட்டத் தொழிலாளர்களின் நலன் கள் தொடர்பான பிரச்சினைகள் முக்கியமாக இடம்பெற வேண்டும். தற்போதுள்ள மிக மோசமான வாழ்க்கைச் செலவை சமாளிப்பதற்கு தோட்டத்தொழிலாளர்களுக்கு பொருத்தமானதும் போதுமானதுமான நிவாரணம் வழங்கப்படல் வேண்டும்.

வரலாற்று ரீதியாக மலையகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அரசியல், சமூக, பொருளாதார அநீதிகளையும் பாகுபாடுகளையும் வெளிக்கொணர்வதற்கான நடவடிக்கைகளை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்று பொதுவான பிரகடனங்களாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அத்துடன் தொழிலாளர் உரிமை பிரகடனங்களாக நடைமுறையிலுள்ள கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர் நலன்களுக்கு விரோதமாக சரத்துக்கள் நீக்கப்படுவதோடு, தொழிலாளர் நலன்களை முன்னுரிமைப் படுத்தக்கூடியதும் சகல தொழிற் சங்கங்களையும் இணைத்துக்கொள்ளக்கூடியதுமான புதிய கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படல் வேண்டும்.

இலங்கையின் ஏனைய துறை சார்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று தோட்டத் தொழிலாளர்களுக்கும் மாதச் சம்பளம் அல்லது வாழ்க்கைச் செலவுப் புள்ளி அடிப்படையில் பொருத்தமான சம்பளம் வழங்கப்படல் வேண்டும் என்றவாறாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. (அ-5)

# விண்ணப்பம் கோரல்

தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால், வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் பதவிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்கு 57 வயதிற்குட்பட்ட, குறிப்பிட்ட கல்வித் தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

1. சுற்றுச்சூழல் நிபுணர் (பதவி 1)
2. மாவட்டக் கணக்காளர் பதவிகள் (3)
3. சமூக அபிவிருத்தி நிபுணர் பதவி (1)
4. தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் நிபுணர் - பதவி (1)
5. சமூக சேவை உத்தியோகத்தர் பதவி (2)
6. சுற்றுச்சூழல் உதவியாளர் பதவிகள் (7)

விண்ணப்பங்கள் 15.05. 2008 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு செயற்றிட்டப் பணிப்பாளர் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம், இல 68/4 a மக்கெய்சியர் வீதி, உவர் மலை திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களை வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிடலாம். (ஓ

# இராசிபலன்

02.05.2008
(சித்திரை 20, வெள்ளிக்கிழமை)
பூரட்டாதி முற்பகல் 08.09 மணிவரை
துவாதசி பின்னிரவு 12.33 மணிவரை
இராகுகாலம் 10.26-11.56 மணிவரை
சுபநேரம் 05.56-07.26 மணிவரை
சுதுமலை புவனேசுவரியம்மை கொடி

| | |
|---|---|
| மேடம் | சுபசெலவு, காரிய அலைச்சல், வீண் மனஸ்தாபம், சயனசுகக்குறைவு. |
| இடபம் | தெய்வதரிசனம், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | கடின உழைப்பு, தெய்வதரிசனம், உறவினர் கலந்துரையாடல். |
| கடகம் | புதிய முயற்சி, தந்தைவழிஉறவு, தெய்வசிந்தை, கட்டுப்பாடு. |
| சிங்கம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், போசனசுகம், பிரயாணம். |
| கன்னி | எடுத்தகாரியம் கைகூடும், செல்வாக்கு, தெய்வதரிசனம். |
| துலாம் | தேகநலன், பகைவர் நேசம், காரிய அனுகூலம், சுபநிகழ்வு. |
| விருச்சிகம் | வியாபாரவிருத்தி, மனக்கிலேசம், சொத்துப்பிணக்கு. |
| தனுசு | சுபசெலவு, ஆரோக்கியக் குறைவு, முயற்சிதாமதம், கல்வியில் ஆர்வம். |
| மகரம் | உறவினர் உதவி, தனவருவாய், காரிய நன்மை. |
| கும்பம் | கோபப்படுதல், காரிய தடங்கல், பணவிரயம், நிலைமாற்றம். |
| மீனம் | கற்பனை மிகுதி, தெய்வசிந்தை, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |

வளவன்

# செரண்திப் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

செரண்திப் புலமைப்பரிசில் நிதியம் இவ்வாண்டுக்கான புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக வருமானம் குறைந்த, திறமையான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

2010ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், தொழில்நுட்ப டிப்ளோமா துறைசார் கல்விநெறிகள், ஷர்ஆ துறையில் கல்வி பயில்வோர், பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மூன்றாம், நான்காம் மற்றும் இறுதியாண்டு தவிர்ந்த ஏனைய மாணவர்களும் இதற்கு விண்ணப் பிக்கமுடியும்.

இப்புலமைப் பரிசில்களை பெறத் தகுதியுடையோர் விண்ணப் பப்படிவங்களை www.ssf-lanka.org எனும் இணையத் தளத்தி னூடாகவும் அல்லது சுய விலாசமிடப்பட்ட முத் திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றினை நிர்வாகச் செயலாளர், செரண்திப் புலமைப்பரிசில் நிதியம், இல 77, தெமட்டகொட வீதி, கொழும்பு 9 எனும் முகவரிக்கு அனுப்பியும் பெற்றுக்கொள்ள முடியுமென அதன் நிர்வாகச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-5)

# ஜெயராஜ் படுகொலைச் சந்தேக நபர் சயனைட் உட்கொண்டமையால் மரணம்

## பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)



அமைச்சர்ஜெயராஜ்பெர்னாண்டோ புள்ளேயின்படுகொலை தொடர்பில் இரகசியபொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த பெண் சயனைட் உட்கொண்டமையினா லேயே உயிரிழந்துள்ளார் என்று பிரேத பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலீஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித் துள்ளார்.

அமைச்சர் படுகொலை தொடர்பில் இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த ராஜி என்ற பெண் இரகசிய பொலிஸ்நிலை யத்தின் ஆறாம் மாடியில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். தடுப்புக் காவலில் இருக்கும் போது கடந்த 27 ஆம் திகதி இரவு சுகவீனமுற்ற நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார்.

இதனையடுத்து அவர் மறு தினம் அதிகாலை வைத் தியசாலையில் உயரிழந்தார். அவர் சயனைட்அருந்தியமையினாலேயே மரணித்துள்ளார் என்று பிரேத பரிசோதனைகளின் போது தெரியவந்ததாக பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் என். கே. இலங்ககோன் தெரிவித்தார். (அ-5)

# சலுசல நிறுவனத்தின் தலைவராக நவவி நியமனம்

(கொழும்பு)


சலுசல நிறுவனத்தின் புதிய தலைவராக புத்தளம் தொகுதி ஸ்ரீல.சு.க. அமைப்பாளர் எம்.எச். எம்.நவவி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, கடந்த வெள்ளிக் கிழமை நவவி கொழும்பில் உள்ள சலுசல நிலையத்தில் உத்தியோக பூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதன்போது, அமைச்சர் களான ஏ.எச்.எம்.பௌஸி, ரிஷாட் பதியுதீன், மேல்மாகாண ஆளுநர் அஸ் ஸெய்யத் அலவி மௌலானா ஜனாதிபதியின் ஆலோசகர் ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (அ-5)

## எளிய முறையில் குடிநீரை சுத்திகரிக்கும் திட்டம்

யாழ்.மாவட்டத்தில் வீட்டிலேயே எளிய முறையில் குடிநீரைச் சுத்தமாக்கும் "சோடீஸ்" திட்டம் அறிமுகப்படுத்தப்படு வதுடன் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் சுகாதாரத் திணைக்களத் தால் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத் தின் கீழ் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரைத் தயாரிப்பதற்கான பிளாஸ்ரிக் போத்தல்கள் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை ஊடாக வழங்கப்படுவதுடன் அதற்கான செய்முறை தொடர்பான அறிவுறுத்தல்களும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந் நடவடிக்கை முதற்கட்டமாக இடம் பெயர்ந்தோர் தங்கியுள்ள நலன்புரி நிலை யங்களில் உள்ள குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரைத் தயாரிப்பதற்கான பிளாஸ்ரிக் போத் தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (அ-5)




## சீமெந்து கொங்கிறீட் மூலம் நான்கு வீதிகள் அபிவிருத்தி

யாழ்.மாவட்டத்தில் உள்ள நான்கு வீதிகள் தேசநிர்மான அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் 43 மில்லியன் ரூபாசெலவில் சீமெந்து கொங்கிறீட்டினால் அமைக்கப்படுவதாக யாழ் அரச அதிபர் கணேஸ் தெரிவித்தார். இதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட சங்கானை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வட்டுக்கோட்டை குக்ஸ் வீதி, சாவகச்சேரி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட இராமலிங்கம் வீதி, கரவெட்டி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பதிவாளர்வீதி மற்றும் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சென் பீற்றர் வீதி ஆகிய நான்கு வீதிகளின் அபிவிருத்திப் பணிகளும் வெற்றிகரமாக நடைபெறுவதாக அரச அதிபர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் யாழ் மாவட்டத்தில் உள்ள மேலும் பல வீதிகள் சிமெந்து கொங்கிறீற் மூலம் அமைக்கப்படும் எனவும் அரச அதிபர் நம்பிக்கை தெரிவித்தார். (அ-3,4,5)

## புலோலி ப.நோ.கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை தெரிவு

புலோலி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவுக்கான பொதுக்கூட்டம் சங்க மண்டபத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ.என். இராஜா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைவராக என்.கணேசலிங்கமும் புலோலி வடக்குக்கிளை உபதலைவராக இளைப்பாறிய மக்கள் வங்கி உத்தியோகத்தர் எஸ்.வல்லிபுரநாதனும் (பெரிய தேவனத்தாய் கிளை) தெரிவுசெய்யப்பட்டனர். இயக்குநர் சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

இளைப்பாறிய உப தபாலதிபர் எஸ்.சந்திரலிங்கம் (தும்பசிட்டிக் கிளை) இளைப்பாறிய அதிபர் ஆறுமுகமகேஸ் (புலோலி கிழக்கு மத்திய கிளை) .இளைப்பாறிய விற்பனை அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் கே.வீரகத்தி (புலோலி தெற்கு கிளை), ஆர். வைகுந்தராசன் (கற்கோவளம் கிளை), திருமதி சத்தியதேவி இரகுராஜன் (வியாபாரிமூலை கிளை). (ஓ-52)

# ஸ்ரான்லிக் கல்லூரியில் நவோத்யா வாரம்

சிறந்த கற்றல் கற்பித்தலை உறுதி செய்வோம் என்ற தொனிப் பொருளில் வித்தியாலய அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நாளை 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை ஒரு வார காலம் நவோத்யா பாடசாலை வாரம் கொண்டாடப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் "வித்தியாலய சிரமதான பணிகள் தினமாக" அனுஷ்டிக்கப்படவுள்ளது. இவ் சிரமதானப் பணிகளில் வித்தியாலய ஆசிரியர்கள் பழைய மாணவர்சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை ஊழியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

3ஆம் நாள் நிகழ்வு திங்கட்கிழமை சமய சமூக விழுமிய தினமாகவும், 4ஆம் நாள். நிகழ்வு செவ்வாய்க்கிழமை விஞ்ஞான கணித மற்றும் தொழில்நுட்ப தினமாகவும், 5ஆம் நாள் நிகழ்வு மொழித்திறன் மதிப்பீட்டுத் தினமாகவும், 6ஆம் நாள் நிகழ்வு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சித் தினமாகவும், 7ஆம் நாள் நிகழ்வு வெள்ளிக்கிழமை மாணவர் ஆக்க மதிப்பீட்டுத் தினமாகவும் கொண்டாடப் படவுள்ளது. (அ)

## ஊழியர் சேமலாப நிதி வழங்க விசேட ஏற்பாடு

யாழ்.தொழில்திணைக்களம் மேற்கொண்ட விசேட செயற்பாட்டின் மூலம் ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக்கொள்ள சிரமப்பட்ட சுமார் 60 பேருக்கு இந்நிதி தாமதமின்றி கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது.

இந்நிதியை பெறமுடியாது சிரமப்பட்டு வந்தோரின் நலன் கருதியே யாழ். தொழில் திணைக்களம் நடத்திய விசேட செயற்பாட்டின் மூலம் நிதியைப் பெறத் தகுதியானோரின் விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அவை தொடர்பான முழுமையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 60 பேருக்கு ஊழியர் சேமலாப நிதி தாமதமின்றி கிடைக்க வழி ஏற்பட்டுள்ளதாகவும் தொழிற் திணைக்களத்தின் இந் நடவடிக்கையே நிதியை பெற்றுக்கொள்ள பெரிதும் உதவியதாகவும் பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளனர். (அ-5)

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உதவி

சுனாமியால் பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்பை இழந்தவர்களுக்கு சீவனோபாய திட்டத்தின்கீழ் சுயதொழில் ஊக்குவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை நகர்ப் பகுதியில் உள்ள சுப்பர் மடம், கொட்டடி,மயிலிட்டி மற்றும் காங்கேசன்துறை கிராமசேவையாளர் பகுதிகளில் உள்ள 40 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, சேவா லங்கா நிறுவனத்தால் சுயதொழில் ஊக்குவிப்பாக பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், கோழிவளர்ப்புக்கான கருவி உபகரணங்களுடன் கோழிகள்,கால்நடை வளர்ப்புக்கான உதவிகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன. (அ-5)

## திருடர்கள் பலவிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் சென்ற வயோதிபப் பெண்ணிடம் திருடன் ஒருவன் தனது கைவரிசையைக் காட்டியுள்ளான்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெறுவதற்காக வட்டுக் கோட்டை மேற்கைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவர் நேற்று முன்தினம் சென்றுள்ளார்.

அங்கு சிகிச்சை பெறும் இடத்தைத் தெரியாது அவர் நின்ற போது, அவருக்கு உதவுவதாக தெரிவித்த ஒருவர் வைத்தியர் இருக்கும் இடத்திற்கு அம்மாதுவை அழைத்துச் சென்று, காண்பித்து சிகிச்சை பெற செய்துள்ளார்.

மீண்டும் அவரை அழைத்து வந்து எக்ஸ்ரே எடுக்கவேண்டும் எனவும், அதனால் அணிந்துள்ள நகைகளை கைப்பைக்குள் வைக்குமாறு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அவர், தான் அணிந்திருந்த சுமார் 7பவுண் தாலிக் கொடி உட்பட நகைகளை கைப்பைக்குள் வைத்தபோது, அவற்றைத் திருடிய அந்நபர் எக்ஸ்ரே அறைக்குச் செல்வதற்காக தள்ளுவண்டியை எடுத்து வருவதாகக் கூறி அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளான்.

இதனையறியாத அப் பெண்மணி நீண்ட நேரம் காத்திருநதபின், தனது நகைகளை எடுப்பதற்காக தனது கைப்பையைத் திறந்து பார்த்தபோது நகை எதுவும் இல்லாததால் அப் பெண்மணி ஏமாற்றமடைந்ததுடன். அவரை எக்ஸ்ரே அறைக்குச் செல்வதற்கான எந்த குறிப்புக்களும் வைத்தியரால் வழங்கப்படவில்லை என்ற தகவலையும் தெரிந்து கொண்டார். (எ)

✠

(யாழ்ப்பாணம்)

பன்னாலை விசுவத்தனைகோவில் பகுதியில் உள்ள வயோதிபர் ஒருவர் திருடர்களால் தாக்கப்பட்டுள்ளதுடன், அவரின் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களையும் இழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, கடந்த ஞாயிற்றுக்கிழமை மதிய நேரம் மழைபெய்து கொண்டிருந்தபோது, இரு இளைஞர்கள் , தனியாக இருந்த வயோதிபரிடம் சென்று, மழை நிற்குமட்டும் தங்களை அங்கு தங்க அனுமதிக்குமாறு கேட்டுள்ளனர்.

அதற்கு அவ் வயோதிபர் அனுமதி அளிக்கவே அவ் இருவரும் வீட்டினுள் சென்று வீட்டின் தோற்றத்தை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

அத்துடன் உள்ளே சென்று பார்ப்பதாகத் தெரிவித்த பிரஸ்தாப வயோதிபரையும் அழைத்துச் சென்றுள்ளனர்.

உள்ளே சென்றதும் வயோதிபரைத் தாக்கிவிட்டு அங்கிருந்த சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணகளைத் திருடிச் சென்றுள்ளனர். (எ)

## முன்பள்ளிகளை பதிவு செய்தல் 2008

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட சகல முன்பள்ளிகளையும் பதிவு செய்ய இருப்பதனால் எதிர்வரும் 10ஆம்திகதிக்கு முன்பதாக யாழ்.மாநகர சபையுடன் தொா ர்பு கொண்டு பதிவுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாநகரசபைச் செயலாளர் ஆர். ரட்ணசிங்கம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## நாட்டுக்கூத்துப் போட்டித் தெரிவு (திறந்தபோட்டி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அழிவடைந்து வரும் கூத்துக்கலையை மேடை யேற்றி ஊக்குவிக்கவேண்டும் என்னும் நோக்கத்தில் மாவட்ட கலை கலாசாரப் பேரவை யால் 30.03.2008 இல் யா/இந்துக் கல்லூரியில் நாட்டுக்கூத்துப் போட்டி நடாத்தப் பட்டது.

இதில் முதலாவதாக வந்த நாவாந்துறை றோ.க.வித்தியாலய குழுவினரின் "கண்டியரசன்" கூத்து முன்பு மேடையேற்றப் பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால் முதலாம் இடத்திற்கான தகுதியை இழக்கின்றது. நிபந்தனைகளின் படி ஏற்கனவே மேடையேற்றப்பட்ட கூத்து தவிர்க்கப்படவேண்டும் என்னும் விதி மீறப்பட்டுள்ளது.

எனினும், ஏனைய விதிமுறைகள் சரியாகக் கடைப் பிடிக்கப்பட்டு மரபு வழி பிறழாது மேடையேற்றப்பட்ட ஒரு சிறந்த கூத்தாக அமைந்ததையிட்டு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதாக யாழ்.மாவட்ட கலை கலாசார பேரவை தலைவரும் யாழ். அரசாங்க அதிபருமான க.கணேஷ் அறிவித்துள்ளார். (ஓ)

## யாழ். மாநகர சபையால் நீர்த்தாங்கி கொள்வனவு

யாழ்.மாநகரசபையின் நீர் வேலைச் செயற்பாட்டிற்காக பிரமாண்டமான நீர்த்தாங்கி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு பொதுமக்களின் பாவனைக்காக விடப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபையின் நீர் வேலைத் திட பொறியியலாளர் சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

சுமார் நான்காயிரத்து ஐந்நூறு லீற்றர் கொள்ளக்கூடிய இந் நீர்த்தாங்கியானது மகிந்தவின் "கமநெகும" கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ், யாழ்.பிரதேச செயலகத்தினுடைய அனுசரணையுடன் கமநெகும, நிதியை எதிர்பார்த்து ரூபா பத்து இலட்சத்து ஐம்பது ஆயிரத்துக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திற்கு உட்பட்ட நீர் வழங்கும் பொதுக் கிணறுகளின் நீரிற்குள் அமிழ்ந்து இயங்கி நீர் வழங்கும் கருவிகள் (நீர்ப் பம்பிகள்) பழுதடைந்து செயற்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் இரண்டு புதிய நீர்ப்பம்பிகளை ஜிரிசற் நிறுவனம் வழங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-3,4)

## நிர்வாக உத்தியோகத்தர் நியமனம்

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தராக இ.விக்கினேஸ்வரமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றியவராவார்.

பருத்தித்துறை பிரதேச செலயக நிர்வாக உத்தியோகத்தராக அதே அலுவலகத்தில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய பி.முருகையா பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ-5)







வேலணைப் பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடாத்தப்பட்ட தென்னை பயிர்ச்செய்கை தொடர்பான முழுநாட் கருத்தரங்கில் கலந்துகொண்ட வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் உரையாற்றுவதையும், அருகில் வேலணைப் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தி.மீரா அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், தென்னை அபிவிருத்திச் சபை பிராந்திய முகாமையாளர் கே.தெய்வேந்திரன் பயிர்ச்செய்கை தொடர்பாக விளக்கமளிப்பதை இரண்டாவது படத்திலும், கருத்தரங்கிற் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# டில்லி அணி திரில் வெற்றி

## 4-வது தோல்வியை சந்தித்தது டிராவிட் அணி

காம்பீர் துடுப்பாட்டத்தினாலும் மெக்ராத்தின் சிறப்பான பந்து வீச்சினாலும் டில்லி டேர் டேவில்ஸ் அணி 10 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்தியன் பிரிமியர் அமைப்பின் இருபது-20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இத்தொடரின் முதலாவது லீக் சுற்



றின் 17-வது போட்டியில் நேற்று முன்தினம் சேவாக் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் டிராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டேவில்ஸ் அணி காம்பீர், டாவானின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களை எடுத்தது.

இதில் காம்பீர் 54 பந்துகளில் (11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 86 ஓட்டங்களையும் டாவான் 33 பந்துகளில் (4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 50 ஓட்டங்களையும் சேவாக் 12 பந்துகளில் 24 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஜக்கலிஸ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 192 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர் நிறைவில் 5 விக்கெட்டக்களை இழந்து 181 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 10 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இதில் கலீஸ் 44 பந்துகளில் (6பவுண்டரி,



ஒரு சிக்ஸர் உட்பட) 54 ஓட்டங்களையும் ராவிட் 38 ஓட்டங்களையும் மற்றும் பௌச்சர் 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மெக்ராத் 4 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களைகக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன் அவரே ஆட்ட நாயகனாகவும் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 3-வது வெற்றியைப் பெற்றது.

டிராவிட் தலைமையிலான பெங்களூர் சலஞ்சர்ஸ் அணி, தான் விளையாடிய 5-வது போட்டியில் சந்தித்த 4-வது தோல்வி இதுவாகும்.

இதேவேளை ஆட்டத்தின் 18-வது ஓவரில் டில்லி டேர்டேவில்ஸ் அணியின் விக்கெட் காப்பாளர் தினேஸ் கார்த்திக் துடுப்பெடுத்தாடினார்.

அவருக்கு பெங்களூர் அணியின் வேகப் பந்து வீச்சாளர் கலிஸ் ஜோக்கராக பந்துவீச நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

பந்து பட்ட வேகத்தில் ஓப்-ஸ்றொம்ஸ் விக்கெட் இரண்டு துண்டாகி உடைந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## முத்தரப்புத் தொடர் ஜூன் 8 ஆரம்பம்

இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேஷ் அணிகள் பங்கேற்கும் 3 நாடுகள் கிரிக்கெற் போட்டித் தொடர் ஜுன் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை பங்களாதேஷில் நடக்கிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதிபெறும்.

இந்த தொடருக்கான இந்திய அணி ஐ.பி. எல்.முதலாவது அரைஇறுதி நடக்கும் நாளான மே 30ஆம் திகதி மும்பையில் தேர்வு செய்யப்பட இருப்பதாக இந்திய கிரிக்கெற் சபையின் செயலாளர் நிரஞ்சன்ஷா தெரிவித்தார். (5)

## முரளிதரனின் திட்டம்

இலங்கை கிரிக்கெற் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கிரிக்கெற்றில் இருந்து ஓய்வுபெற்ற பின்பு பயிற்சியாளராக திட்டமிட்டுள்ளார்.

அதாவது அவரும் அவரது நண்பர் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில்கும்ளேயும் சேர்ந்து, இந்திய துணை கண்டத்தில் உள்ள வீரர்களுக்கு சுழற்பந்து வீச்சு பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளனர். ஒவ் வொரு அக்கடமியிலும் ஒன்று அல்லது 2 வாரங்கள் தங்கியிருந்து பணியாற்ற விரும்புவதாக முரளிதரன் கூறியிருக்கிறார். (5)

## குழந்தைகளைக் கவர்வதில் தோனி முதலிடம் பிடித்தார்

குழந்தைகள், இளைஞர்களை கவரும் இந்திய கிரிக்கெட் வீரர்களில் இதுவரை டெண்டுல்கர் முதலிடத்தில் இருந்தார். இப்போது எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பில் டெண்டுல்கரை முந்தி டோனி முதலிடம் பிடித்துள்ளார்.

ஆங்கில் கார்டூன் தொலைக்காட்சி சேவை ஒன்று இது தொடர்பாக கருத்து கணிப்பு ஒன்றை இந்தியா முழுவதும் நடத்தியது. 14நகரங்களில் 6ஆயிரத்து 40பேரிடம் இந்த கருத்து கணிப்பு நடத்தப்பட்டது. இதில் 3 ஆயிரத்து 20பேர் 7வயதில் இருந்து 14 வயதுக்கு உட்பட்டவர்கள்.

இதில் 32 சதவீதம் பேர் தங்களுக்கு பிடித்த கிரிக்கெட் வீரர் தோனி என்றார்கள். டெண்டுல்கருக்கு 31சதவீத ஆதரவு இருந்தது.

நடிகர்கள் ஷாருக்கான், ஹிருத்திக்ரோஷன் இருவரும் சம அளவில் குழந்தைகளை கவர்ந்திருந்தனர். இருவருக்கும் தலா 22சதவீத ஆதரவு இருந்தது. நடிகைகளில் ஐஸ்வர்யாராய் 18 சதவீதம் ஆதரவும் பெற்று முதலிடத்தில் இருந்தார்.

இந்த கருத்து கணிப்பு எஸ்.எம். எஸ்.மற்றும் தொலைபேசி இணையத்தளம் மூலம் எடுக்கப்பட்டது. குழந்தைகள் இபபோது அறிவியல் தகவல்களை அறிந்து கொள்வதில் மிகவும் ஆர்வமாக இருப்பதும் தெரிந்தது. (5)

## மீண்டும் மோசமாக நடந்தால் ஹர்பஜனுக்கு வாழ்நாள் தடை

### எச்சரிக்கிறார் பிந்த்ரா

(மெல்போர்ன்)

களத்தில் ஹர்பஜன் மீண்டும் மோசமாக நடந்துகொண்டால் வாழ்நாள் தடைவிதிக்கப்



படும் என ஐ.பி.எல்.நிர்வாக குழு உறுப்பினர் ஐ.எஸ். பிந்த்ரா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மொகாலியில் நடந்த ஐ.பி. எல். லீக் போட்டியில் சிறிசாந்த் கன்னத்தில் ஹர்பஜன் அறைந்தார். இது விசாரணையில் உறுதி செய்யப்பட 11 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டார். இந்நிலையில் ஐ.பி. எல். நிர் வாக குழு உறுப்பினர் ஐ.எஸ்.பிந்த்ரா கூறுகையில்,

ஹர்பஜன் தனக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை பார்த்து திருந்திக்கொள்ள வேண்டும். அவுஸ்திரேலிய தொடரின் போதே எச்சரிக்கப்பட்டார். நான் அவருக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனை கூறினேன். ஆனால் அவர் திருந்துவதாகத் தெரியவில்லை. அவரது செய்கைகள் எங்களுக்கு வருத்தத்தை அளிக்கிறது.

இப்போது விதிக்கப்பட்ட தடையுடன் முடிந்துவிடவில்லை. இந்தியன் கிரிக்கெற் சபையும் (பி.சி.சி.ஐ.) தனது விசாரணையை ஆரம்பித்துள்ளது. மீண்டும் ஒருமுறை ஹர்பஜன் இதுபோன்ற செயலில் ஈடுபட்டால் வாழ்நாள் தடையை சந்திக்க நேரிடும். பொதுவாகவே வீரர்கள் உட்பட அனைவரும் இந்தியன் கிரிக்கெற்சபை கருணை உள்ளம் கொண்டது என்று நினைத்துக்கொண்டு இருந்தார்கள். ஹர்பஜன் விடயத்தில் இது பொய்யாகிவிட்டது.

அவுஸ்திரேலியாவில் நடந்த சம்பவத்துடன் இதனை ஒப்பிடக்கூடாது அந்த விடயத்தில் ஹர்பஜன் குற்றமற்றவர். ஆதலால் இந்திய கிரிக்கெற்சபை முழுமையாக ஆதரவு தெரிவித்தது. தற்போதைய பிரச்சினையில் குற்றம் செய்துள்ளதால் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றார். (5)

## பாக்.அணியில் அனுமதியின்றேல் ஐ.பி.எல்.போட்டிகளில் அக்தர் ஆடமுடியாது!

(மும்பை)


ஐ.பி.எல் போட்டிகளில் பாகிஸ்தான் பந்து வீச்சாளர் சோயிப் அக்தர் விளையாட முடியாது என இந்திய கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அக்தருக்கு விதிக்கப்பட்ட ஐந்தாண்டு தடையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தீர்ப்பாயம் உறுதி செய்தது. எனினும் அவர் வெளிநாடுகளில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்கலாம் என தெரிவித்தது. இதனை யடுத்து அவர் ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்கத்தடை நீங்கியதாக கருதப்பட்டது.

இந்நிலையில் அக்தர் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட முடியாது என்றும், அவர் பாகிஸ்தான் தேசிய அணியில் விளையாட அனுமதிக்கப்பட்டால் மட்டுமே ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்படுவார் என்றும் இந்திய கிரிக்கெட் சபைக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



பெங்களூரில் நடைபெற்ற இந்திய கிரிக்கெட் சபையின் சிறப்பு செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது. அக்தர் கொல்கத்தா அணிசார்பில் விளையாட தேர்வு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)







வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கிராமக் குறுக்கோட்ட திருவிழா (Cross Country Festival) வினை கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்கள் குறுக்கோட்ட நிகழ்வில் கலந்து கொண்டிருப்பதை முதலாம், இரண்டாம் படங்களிலும் கலை நிகழ்வில் ஓர் அங்கமான இசை நிகழ்வில் ஆசிரியர்கள் பாடல் பாடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (வட்டுக்கோட்டை நிருபர்)

# எகிப்தில் பயணிகள் பஸ் எரிந்ததில் வெளிநாட்டவர் 8 பேர் பலி

(கெய்ரோ)

எகிப்தில் வெளிநாட்டுப்பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் தலைகீழாக கவிழ்ந்து தீப்பற்றி எரிந்ததில் 8 பேர் பலியானார்கள். 28 பேர் காயமடைந்தனர். எகிப்தின் சினாய் தீபகற்பம் பகுதியில் உள்ள ஒரு விடுதி ஒன்றிலிருந்து தலைநகர் கெய்ரோவை நோக்கி அந்த பஸ் சென்றுகொண்டிருந்தது.

அப்போது சூயஸ் பகுதிக்கு 70கிலோ மீற்றர் தொலைவில் சென்று கொண்டிருந்த போது பஸ்ஸின் ரயர் வெடித்து தீப்பற்றிக் கொண்டது.

இதனால் பஸ் கட்டுப்பாட்டை இழந்து தறிகெட்டு ஓடி தலைகீழாக கவிழ்ந்து தீப் பற்றி எரியத்தொடங்கியது. இதில் 8 பேர் உடல் கருகி பலியானார்கள். 28 பேர் படு காயமடைந்தனர்.

இந்த பஸ்ஸில் பிரிட்டன், கனடா மற்றும் இத்தாலி உள்ளிட்ட வெளிநாட்டுப்பயணிகள் பயணம் செய்தனர்.

(அ-5)

## உலக தரிசனம்

# ஈரானில் நில நடுக்கம்

(டெஹ்ரான்)

ஈரானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் நூற்றுக் கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மேற்கு ஈரானில் உள்ள லோரிஸ்டன் மாகாணத்தில் நேற்று அதிகாலை 4.45 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் இது 4.7 ஆக பதிவானது. இந்த பூகம் பத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாக ஈரான் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

(அ-5)

# தலீபான்களிடம் இருந்த நகரை அமெ.இராணுவம் கைப்பற்றியது

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தெற்கு பகுதியில் உள்ள ஹெல்மாண்ட் மாநிலம் தலீபான்களின் செல்வாக்கு உள்ள பகுதி ஆகும். அங்கு உள்ள பல நகரங்கள் தலீபான்களின் கட்டுப் பாட்டில் உள்ளன. அப்படி தலீபான்கள் வசம் இருக்கும் ஒரு நகரம் கர்ம்சிர் ஆகும்.

சமீப காலமாக ஹெல்மாண்ட் மாநிலத்தில் அமெரிக்க இராணுவம் அடிக்கடி சோதனை நடத்தி வருகிறது. கர்ம்சிர் நகரை கைப்பற்றும் நோக்கத்தோடு நூற்றுக்கணக்கான அமெரிக்க இராணுவ வீரர்கள் அந்த நகருக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை புகுந்தனர். அவர்களை எதிர்த்து தலீபான் தீவிரவாதிகள் சிறிய அளவில் தாக்குதல் நடத்தினார்கள். இதில் எந்த பலனும் கிடைக்கவில்லை.

இராணு வீரர்கள் அந்த நகரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அந்த நகரில் உள்ள அரசாங்க அலுவலகங்களின் கட்டுப்பாட்டை இராணுவம் தன் வசம் கொண்டு வந்து. இந்த தகவலை அமெரிக்க இராணுவ அதிகாரி கப்டன் கெல்லி பிரஷர் தெரிவித்தார். (அ-5)

# சாப்பாட்டை குறைக்காமல் எடையை குறைக்க புதிய தொழில் நுட்பம் கண்டுபிடிப்பு

(சிட்னி)

சாப்பிடும் அளவை குறைக்காமலேயே உடல் எடையை குறைக்கும் புதிய தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புதிய மருந்துகள் கண்டுபிடிக்கும் வாய்ப்புகள் உருவாகி உள்ளன. ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மைக்கேல் மதாய் எலிகளிடம் இது தொடர்பாக சோதனை நடத்தினார். எலிகளில் கொழுப்பு செல்கள் அவற்றின் வளர்ச்சி மாற்றத்தை துரிதப்படுத்துவது எப்படி என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எலிகளில் ஆஞ்சியோடென்சின் கன்வெர்டிங் என்சைம் என்ற பொருள் நீக்கப்பட்டு விட்டால் மற்ற எலிகளைப் போலவே அவை உணவு உட்கொண்டாலும் அதில் உள்ள கலோரி வெகு விரைவில் எரிக்கப்பட்டு சக்தியாக்கப் பட்டு விடுகிறது. இதன் மூலம் உடல் எடை குறைகிறது. எனவே ஆஞ்சியோடென்சின் கன்வெர்டிங் என்சைம்களை செயலிழக்கச் செய்வதன் மூலம் வழக்கம் போல உணவு உட்கொண்டாலும் உடல் எடையை குறைக்க முடியும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆஞ்சியோடென்சின் கன்வெர்டிங் என்சைம்களை செயலிழக்கச் செய்யக்கூடிய மருந்துகள் ஏற்கனவே விற்பனையில் உள்ளன. ஆனால் இவை அதிக ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மட்டும் தான் இதுவரை பரிந்துரை செய்யப்பட்டு வந்தன.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள சோதனை முடிவுகள் மனிதர்களுக்கும் பொருந்தும் வகையில் இருந்தால் ஆஞ்சியோபடென்சின் கன்வெர்டிங் என்சைம்களை செயலிழக்கச் செய்யும் புதிய மருந்துகள் கண்டுபிடிக்கும் வாய்ப்பு உருவாகும் இதற்கான முயற்சியில் விஞ்ஞானிகள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். (அ-5)

# ஆறு திங்கள் நிலவில் தங்க "நாசா" புதிய திட்டம்

(மியாமி)

நிலவில் விண்வெளி வீரர்கள் ஆறு மாதம் தங்குவதற்கான புது திட்டத்தை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு நாசா தீட்டி வருகிறது.

நிலவில் ஆறு மாதம் தங்கி பல ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வசதியாக விண்வெளி வீரர்கள் தங்கும் வகையில் விண் வெளி மையத்தை அமைக்க நாசா முடிவு செய்துள்ளது. இந்தமையத்தில் இருந்து நிலவில் வலம் வர போக்குவரத்து மற்றும் மின்சார வசதியையும் செய்ய பரிசீலித்து வருகிறது. இது தொடர்பான ஆராய்ச்சிகளை முடித்து இன்னும் இரண்டாண்டில் நிலவில் தங்குவதற்கானமையத்தை அமெரிக்கா அமைத்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவிடம் உள்ள மூன்று விண் கலங்கள் இன்னும் இரண்டாண்டு தான் செயல்பட முடியும் இதனால் 2010க்குள் புது விண்கலம் தயாரித்து முடிக்கவும் ஏற்பாடு நடந்து வருகிறது. விண்வெளியில் ஆறு மாதம் தங்குவதற்கு ஏற்ப மையத்தை அமைத்துவிட்டால் விண்வெளி சுற்றுலா திட்டத்தையும் அனுமதிக்கலாம் என்றும் அமெரிக்கா எண்ணியுள்ளது. அந்த திட்டம் நிறைவேறினால் 2010க்கு பின் விண்வெளிக்கு பொது மக்கள் சுற்றுலா போகலாம். (அ-5)

## பிரேசில் புல்வெளி பிரதேசத்தில் காலில்லா பல்லி கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

கால் இல்லா பல்லி உள்ளிட்ட 12 அரிய வகை உயிரினங்களை பிரேசில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இவையனைத்தும் பிரேசில் நாட்டில் உள்ள சிராடோ புல்வெளிப் பிரதேசத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

7.160 சதுர கிலோ மீற்றர் பரப்புக் கொண்ட சிராடோ புல்வெளிப் பிரதேசத்தில் அமெரிக்க மற்றும் பிரேசில் விஞ்ஞானிகள் கூட்டாக ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் போது பல அரிய வகை உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

அதில் காலில்லா பல்லி ஒன்று, 8 மீன் வகைகள், 3 ஊர்வன பிராணிகள், ஒரு பாலூட்டி வகை ஆகியன அடங்கும்.

இத் தகவல் சர்வதேச சுற்றுச்சூழல் அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-5)

# அப்காஸியாவை ஆக்கிரமிக்க ஜோர்ஜியா முயற்சிப்பதாக ரஷ்யா குற்றச் சாட்டு

(மொஸ்கோ)

ஜோர்ஜியாவானது தனது நாட்டிலிருந்து பிரிந்த பிராந்தியங்களுக்கு எதிராக படை பலத்தைப் பிரயோகிக்குமானால் பதில் தாக்குதல் நடத்தப்படும் என ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அப்காஸியாவை ஆக்கிரமிக்க ஜோர்ஜியா முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியுள்ள ரஷ்ய வெளிநாட்டு அமைச்சு அதற்கு பதிலடி கொடுக்கு முகமாக அப்பிராந்தியத்திலும் தென் ஒஸெதியா பிராந்தியத்திலும் தம்து படைப்பலத்தை ஊக்குவித்து வருவதாக தெரிவித்தது.

இது தொடர்பான அறிக்கையொன்றை ரஷ்ய வெளிநாட்டு அமைச்சு உத்தியோக பூர்வமாக வெளியிட்டு வைத்துள்ளது.

இந்நிலையில் ஜோர்ஜிய பிரதமர் லாடோ குர்ஜெனிட்ஸே ரஷ்யாவின் இந்நடவடிக்கையானது பொறுப்புணர்வற்ற ஒருசெயல் எனத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவினது இந்த முன்னடியெடுத்து



வைப்பானது பிராந்தியத்தில் தீவிர ஸ்திரத் தன்மை குலைவு ஏற்பட வழிவகுக்கும் என அவர் கூறினார்.

அப்காஸியாவுக்குள்ளே ரஷ்ய படையினரோ அல்லது அவர்களது இராணுவ உபகரணங்களோ வருவது சட்டவிரோதமானதாகும். என ஜோர்ஜிய பிரதமர் குற்றஞ்சாட்டினார்.

அதேசமயம் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டுக் கொள்கைத் தலைவர் ஜாவியர் ஸொலானா இது குறுத்து ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் ஸேர்ஜி லாவ்ரோவை சந்தித்து உரையாடினார்.

தற்போது நிலவும் பதற்ற சூழ்நிலையில் மேற்படி பிராந்தியங்களில் படையினரை அதிகரிக்கும் ரஷ்யாவின் முயற்சி புத்திசாலித்தனமான ஒன்றல்ல என ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டு கொள்கைத் தலைவர் தெரிவித்தார்.

எனினும் ரஷ்யாவானது தாம் போரொன்றுக்கு தயாராகவில்லை எனவும் தாக்குதல் நடத்தப்பட்டால் பதில் தாக்குதல் நடத்தும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையொன்றையே மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளது. (அ-5)

## பிரித்தானியாவுக்குள் நுழைய பின்லேடனின் மகனுக்கு தடை

(லண்டன்)

தனது புதிய மனைவியுடன் பிரித்தானியாவில் வாழ்வதற்கு அல்-கொய்தா தலைவர் ஒஸாமா பின்லேடனின் மகனுக்கு தடை விதிக் கப்பட்டுள்ளது.

52 வயதான தனது மனைவியான ஜேன் பீலிக்ஸ் பிறவுணியுடன் அவரது சொந்த ஊரான செஷியரில் சேர்ந்து வாழும் முகமாக ஒஸாமா பின்லேடனின் மகனான ஓமர் பின்லேடன் (26வயது) விசாவுக்கு விண்ணப்பித்திருந்தார்.

எனினும் அவரது விண்ணப்பத்தை பிரித் தானிய தூதரகம் நிராகரித்துள்ளது. (அ-5)

# 17 நிமிடங்களுக்கு மூச்சை அடக்கி உலக சாதனை

அமெரிக்க மாயாஜால வித்தை நிபுணர் டேவிட் பிளெய்ன் (வயது35) நீருக்கடியில் 17 நிமிடங்கள் 2 செக்கன்கள் மூச்சை அடக்கியிருந்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

8ஆயிரத்து 200 லீற்றர் நீர் நிரப்பப்பட்ட கோள வடிவ தண்ணீர் தொட்டியில் மூழ்கியிருந்தே இந்த சாதனையை அவர் நிலைநாட்டியுள்ளார்.

100 அடி உயரமான துருவப் பனிப் பாறையில் ஏறியமை, இரண்டரை நாட்கள் பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தமை, 44 நாட்கள் பெட்டியொன்றில் உணவு எதுவுமின்றி அடைபட்டு கிடந்தமை போன்ற சாதனைகளை டேவிட் பிளெய்ன் ஏற்கனவே வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

# புத்துயிர் பெறும் அல்-கைதா

(ஆப்கான்)

மீண்டும் புத்துயிர் பெறும் அல்-கைதா அமைப்பு மேற்குலகுக்கு மிகப் பெரும் பயங்கரவாத அச்சுறுத்தலாக உருவெடுப்பதாக அமெரிக்க அரசுத்துறை கூறியுள்ளது.

பாகிஸ்தானின் பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள பாதுகாப்பான பதுங்குமிடங்களில் இருந்து அல்-கைதா, ஆப்கானுக்குள் தாக்குதல்களை மேற்கொள்கிறது என்றும் உலகளாவிய அளவில் ஆட்களை சேர்க்கவும் பயிற்சி அளிக்கவும் பரப்புரைகளை மேற்கொள்ளவும் அது திட்டமிட்டுள்ளதாகவும் அமெரிக்க அரசுத் துறை தெரிவிக்கின்றது. (எ-5)

# சோமாலியாவில் பஞ்சம் ஐ.நா.சபை எச்சரிக்கை

(சோமாலியா)

தொடர்ந்து நிலவும் வரட்சி காரணமாகவும் உணவுப் பொருட்களின் விலையுயர்வு காரணமாகவும் சோமாலியா பெரும்பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளதாக ஐ.நா நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த ஆண்டின் முடிவுக்குள் சோமாலியாவில் வாழும் மக்களில் பாதிப்பேருக்கு -அதாவது கிட்டத்தட்ட 35 இலட்சம் பேருக்கு உணவு உதவி தேவைப்படும் என்று ஐக்கிய நாடுகளின் உணவுப் பாதுகாப்பு ஆய்வகக் குழு கூறியுள்ளது.

மிக அதிகளவில் நிலவும் பணவீக்கம், சோமாலிய நாணயமான செல்லிங்கின் மதிப்பு குறைவது மற்றும் அங்கு ஓய்வின்றி நடக்கும் ஆயுதப் போராட்டம் போன்ற காரணங்களால் நகர்ப்புறங்களில் வாழும் ஏழைகளுக்கு உணவு கிடைப்பது என்பது மிக மிக கடினமாகி வருகிறது என்று ஐ.நா அமைப்புக் கூறுகிறது. (ச)

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும் — வலிகாமம் கல்வி வலயமும்

தகவல் தொடர்பாடல்தொழில் நுட்பத்தின் செல்வாக்கு இன்று அனைத்துத் துறைகளிலும் வேரூன்றி வருகின்றது. இவ்வாறு மாறிவருகின்ற உலக நடைமுறைகளுக்கு ஏற்ப, எதிர்காலச்சவால்களை எதிர்கொள்ளக் கூடியவர்களாக- எதிர்காலச் சூழலுக்கு இசைவாக்கமுடையவர்களாக, இளஞ்சிறார்களை மாற்றியமைக்கின்ற தார்மீகக் கடமை கல்விச் சாலைகளைச் சார்ந்ததாகின்றது. இந்த வகையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அறிவினை மாணவர்களுக்கு ஏற்றவகையில் வழங்கவேண்டிய கடமையும் பாடசாலைகளைச் சேர்ந்ததாகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு கல்வி அமைச்சும் தனது கலைத்திட்டத்தில், தரம் 10, 11 இல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) என்ற பாடத்தினையும் ,க.பொ.த உயர்தரத்தில் பொதுத் தகவல் தொழிநுட்பம்(GIT) என்ற பாடத்தினையும் இணைத்துக் கொண்டது. இவற்றைவிட தரம் 6 தொடக்கம் அநேக பாடசாலைகள் அடிப்படைக் கணனி அறிவை விருத்தி செய்யும் நோக்கில் வகுப்புகளையும் நடத்தி வருகின்றன.

வலிகாமம் கல்வி வலயத்திலும் இவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வலிகாமம் கல்வி வலயத்தில் இரண்டாம் நிலைக் கல்வி நவீனமயமாக்கல்(SEMP) செயற்திட்டத்தின்கீழ் 9 பாடசாலைகளில் Computer Learning Centres (CLC)ம் 4 பாடசாலைகளில்Information and communication technology centres (ICT) அமைக்கப்பட்டுள்ளன இவற்றுள் 9CLC ஆய்வுகூடம்உள்ள பாடசாலைகளிற்கு schoolnet என்ற இணையத்தளத்தினூடாக இணைய வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. வலிகாமத்தில் 13 பாடசாலைகளுக்கு ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பினும், இம்முறை வலிகாமம் கல்வி வலயத்தில்உள்ள 25பாடசாலைகளைச் சேர்ந்த 222 மாணவர்கள் ICT பாடத்தினை க.பொ.த (சா/த) இல் ஓர் பாடமாகத் தோற்றியுள்ளனர். ஆய்வுகூடவசதிகள் இல் லாத 12 பாடசாலைகளும் பாடசாலைச் சமூகத்திடமோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களினூடாகப் பெற்ற உதவிகளின் மூலமோ பெற்ற ஓரிரண்டு கணனிகளைக் கொண்டு தமது மாணவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான நிலையில் கடந்த க.பொ.த (சா/த) பரீட்சையில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள்93.24% ICT பாடத்தில்சித்தியடைந்துள்ளனர். வலயமட்ட முடிவுகளின் பகுப்பாய்வுகளை நோக்குமிடத்து

| பரீட்சைக்கு | | சித்தி | பெறுபேறுகள் -எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| விண் | தோற் | | A | B | C | S | W |
| 226 | 222 | 207 | 50 | 34 | 61 | 62 | 15 |

| பரீட்சைக்கு | | சித்தி% | பெறுபேறுகள் வீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| விண் | தோற்% | | A-% | B-% | C-% | S-% | W-% |
| 100 | 98.23 | 93.24 | 22.50 | 15.31 | 27.47 | 27.92 | 675 |

என்ற வகையில் அமைவதைக் காணலாம். கோட்ட ரீதியாக இப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்யுமிடத்து.

| கோட்டம் | பரீட்சைக்கு | | சித்தி | சித்தி வீதம் | பெறுபேறுகள் வீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விண் | தோற் | | | A-% | B-% | C-% | S-% | W-% |
| சங்கானை | 69 | 67 | 65 | 97.01 | 18 | 09 | 12 | 26 | 02 |
| தெல்லிப்பளை | 57 | 57 | 55 | 96.49 | 14 | 06 | 19 | 16 | 02 |
| சண்டிலிப்பாய் | 75 | 74 | 67 | 90.54 | 10 | 17 | 24 | 16 | 07 |
| உடுவில் | 25 | 24 | 20 | 83.33 | 08 | 02 | 06 | 04 | 04 |

என்ற வகையில் அமைவதைக் காணலாம். அரசினால் அமைக்கப்பட்ட கணனி ஆய்வுகூடங்களில் சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் 3 ஆய்வுகூடங்களும், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் 4 பாடசாலைகளும், சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் 3 பாடசாலைகளும்,உடுவில் கல்விக் கோட்டத் தில் 3பாடசாலைகளும் அடங்குகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை ரீதியாகப் பெறுபேறுகளை ஆராயுமிடத்து,(அட்டவணை I) என்ற வகையில் அமைவதைக் காணலாம்.

இவற்றுள் 100% சித்தியை அடைந்துள்ள 12 பாடசாலைகளில் 07 பாடசாலைகளில் ஏற்ற ஆய்வுகூட வசதிகள் இல்லை. விக்ரோறியாக் கல்லூரி 100% சித்தியைக் காட்டுகின்ற போதிலும் அதன் பெறுபேறுக ளில் வளர்ச்சி அவசியமாகின்றது. இதேபோல இராமநாதன் கல்லூரிப் பெறுபேறுகளிலும் வளர்ச்சி தேவை. யாழ்ப்பாணக் கல்லூரி, ஸ்கந்தவரோதய கல்லூரி ஆகியன 90% சித்தியை அடைந்திருந்தாலும் முறையே 6, 5 மாணவர்கள் A சித்தியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். யூனியன் கல்லூரி, சங்கானை சிவப்பிர காச ம.வி என்பன பாராட்டுக்குரிய பாடசாலைகளாகும். இவ்வாறாகப் பொதுவாகச் சில குறைகள் இருப்பினும் போதிய பயிற்சி, அனுபவம் இல்லாத புதிய துறையில் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகள் 93.24% சித்தி பெற்றுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும். தொடர்ந்து வருகின்ற காலங்களில் இப்பேறுகள் மேலும் வளர்ச்சியடைய ஆசிரியர்களும், துறைசார் அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் செயற்படுவது அவசியமாகின் றது.

க.பொ.த உயர்தர மாணவர்களை நோக்குமிடத்து GIT பாடத்தில் க.பொ.த (சா/த) மாணவர்கள் காட்டுகின்ற அக்கறையை உயர்தர மாணவர்கள் காட்டாமை மன வேதனைக்குரிய விடயமாகும்.GIT பாடத்தினைப் பொறுத்தவரையில் அப்பாடம் பிரதான பாடங்களில் உள்ளடக்கப்படாமையும், இப்பாடத்தின் முக்கியத்துவத்தை மாணவர்கள் விளங் கிக் கொள்ளாமையும் மாணவர்களின் நாட்டக் குறைவிற்குக் காரணமாகின் றன. க.பொ.த(உ/த) GIT பாடப் புள்ளி பகுப்பாய்வு அடுத்த கட்டுரை யில் விரிவாகத் தரப்படும்.

அண்மையில் S.E.M.P அனுசரணையுடன் மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட மென்பொருள் ஆக்கப் போட்டியில் வலிகாமம் கல்வி வலயத்தினைச் சேர்ந்த 33ஆசிரியர்களும், 141 மாணவர்களும் பங்குபற்றி, 15ஆசிரியர்களும் 10 மாணவர்களும் பரிசில்களை வென்றுள்ளனர். இவர்களுக்காக வலயமட்டத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கணனி விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி S. மகேசன் கலந்து பரிசில்களை வழங்கியுள்ளார்.

வலிகாமம் கல்விவலயம் மாணவர்களது கணனி அறிவு வளர்ச்சி செயற்பாடுகளுடன் மட்டும் நின்றுவிடாது. ஆசிரியர்களது கணனி அறிவு மேம்படுத்தலுக்காகவும் பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. வலிகாமம் கல்விவலயம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் மேம்பட்டிருப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு ப. விக்னேஸ்வரன் அவர்களது பெருமுயற்சியும், வழங்கிவருகின்ற ஒத்துழைப்புமே பிரதான காரணமாகின்றது என்றால் மிகையாகாது.

**க.மணிமார்பன்**
ஆசிரிய ஆலோசகர்,
வலிகாம வலயம்.

(அட்டவணை I)

| பாடசாலை | பரீட்சைக்கு | | சித்தி | சித்தி வீதம் | பெறுபேறுகள் வீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விண் | தோற் | | | A | B | C | S | W |
| வட்டு இந்துக்கல்லூரி | 23 | 22 | 21 | 95.23 | 02 | 03 | 04 | 12 | 01 |
| விக்ரோறியாக்கல்லூரி | 08 | 08 | 08 | 100 | 01 | - | - | 07 | - |
| சங்கானை சிவப்பிரகாச ம.வி | 17 | 16 | 16 | 100 | 07 | 02 | 03 | 04 | - |
| பண்ணாகம் மெய்கண்டான் ம.வி | 05 | 05 | 05 | 100 | 02 | 01 | 02 | - | - |
| யாழ்ப்பாணக் கல்லூரி | 16 | 16 | 15 | 90 | 06 | 03 | 03 | 03 | 01 |
| யூனியன் கல்லூரி | 20 | 20 | 20 | 100 | 08 | 03 | 06 | 03 | |
| மகாஜனாக் கல்லூரி | 14 | 14 | 14 | 100 | 04 | 01 | 02 | 07 | - |
| வசாவிளான் மத்திய மகா வித். | 06 | 06 | 05 | 83 | - | 02 | - | 03 | 01 |
| மல்லாகம் மத்திய மகா.வித். | 15 | 15 | 15 | 100 | 02 | - | 10 | 03 | - |
| இளவாலை மெய்கண்டான் மகா.வித். | 02 | 02 | 01 | 50 | - | - | 01 | - | 01 |
| மானிப்பாய் இந்துக்கல்லூரி | 11 | 11 | 10 | 90.9 | 02 | 04 | 03 | 01 | 01 |
| மானிப்பாய் மகளிர் கல்லூரி | 06 | 06 | 06 | 100 | - | 03 | 01 | 02 | - |
| இளவாலை கன்னியர்மடம் ம.வி. | 07 | 06 | 06 | 100 | 03 | 01 | 02 | - | - |
| புனித ஹென்றியரசர் கல்லூரி | 20 | 20 | 19 | 95 | 03 | 01 | 08 | 07 | 01 |
| பண்டத்தரிப்பு பெண்கள் உ.த.பாட. | 05 | 05 | 04 | 80 | - | - | 03 | 01 | 01 |
| சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி | 05 | 05 | 04 | 80 | 01 | 01 | 01 | 01 | 01 |
| மானிப்பாய் மெமோறியல் ஆங். பாட | 11 | 11 | 09 | 82 | 01 | 05 | 01 | 02 | 02 |
| பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. | 01 | 01 | 01 | 100 | - | - | - | 01 | - |
| ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய | 05 | 05 | 04 | 80 | - | - | 03 | 01 | 01 |
| பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி | 01 | 01 | 01 | 100 | - | - | 01 | - | - |
| மாதகல் சென்ஜோசப் ம.வி. | 03 | 03 | 03 | 100 | - | 02 | 01 | - | - |
| இராமநாதன் கல்லூரி | 08 | 08 | 06 | 75 | 01 | - | 03 | 02 | 02 |
| ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 11 | 10 | 09 | 90 | 05 | 01 | 03 | - | 01 |
| இணுவில் இந்துக் கல்லூரி | 01 | 01 | 01 | 100 | 01 | - | - | - | - |
| இணுவில் மத்திய கல்லூரி | 05 | 05 | 04 | 80 | 01 | 01 | - | 02 | 01 |

# சிறையில் 17 ஆண்டுகள் கழித்துள்ள என்னை விடுதலை செய்ய வேண்டும்

## உயர்நீதிமன்றில் நளினி மனு

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 16 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக்கும் என்னை விடுதலை செய்ய வேண்டும் என்று ஆயுள் தண்டனை கைதி நளினி, சென்னை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கு தடாகோர்ட்டு தூக்குத் தண்டனை விதித்தது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. 11.5.1999இல் இதில் 19 பேரை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது. 3பேருக்கு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. மீதி 4 பேருக்கு தூக்குத்தண்டனைவிதிக்கப்பட்டது. தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவர்.

எனக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை குறைக்கலாம் என்றும், பொதுமன்னிப்பு வழங்கலாம் என்றும், சோனியாகாந்தி தெரிவித்தார். இதன்பின்னர் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்று தமிழக அரசு பரிந்துரை செய்தது. எனது கருணை மனுவைஏற்று, ஆளுநரும் ஆயுள் தண்டனையாக குறைத்தார். 24.4.2000 அன்று இது அரசு அறிவிப்பாக வெளியிடப்பட்டது.

**16 ஆண்டுகளுக்கும் மேலாக**

25.4.2000 முதல் ஆயுள் தண்டனை கைதியாக வேலூர் மத்திய சிறையில் தண்டனையை அனுபவித்து வருகிறேன். 16 ஆண்டுகள் 9மாதம் 18 நாட்கள் சிறையில் இருந்து வருகிறேன். 17.6.2005 அன்றே 14 ஆண்டுகள்நிறைவடைந்துவிட்டது. ஆகவே, விடுதலை பெற எனக்கு தகுதி உள்ளது. 2005, 2006, 2007 ஆகிய 3 ஆண்டுகளிலும் கைதிகளை விடுதலை செய்யும் பட்டியலில் என்னை சேர்க்கவில்லை. 14.9.2006 இல்மட்டும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் 10 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்கள் 472 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

**தவறு செய்யாதவர்**

நான் சிறையில் எந்தக் குற்றத்திலும் ஈடுபடவில்லை. எனது நன்னடத்தை நன்றாக உள்ளது. என்னை விடுதலை செய்யலாம் என்று நன்னடத்தை அதிகாரி பரிந்துரை செய்தும், ஆலோசனை குழு கேட்கவில்லை. ஆகவே, என்னை விடுதலை செய்யும்படி உயர்நீதி மன்றம் உத்தரவிடவேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

**முறையானதல்ல**

நீதிபதிபி.ஜோதிமணி முன்னிலையில் இந்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. நளினி சார்பில் வக்கீல்கள் எஸ்.துரைசாமி , வி.இளங்கோவன் ஆகியோர் ஆஜரானார் கள். வக்கீல்எஸ்.துரைசாமிவாதாடுகையில், ''ஆலோசனை குழுவில் 7 பேர் இருக்க வேண்டும் என்றும், ஆனால், 3பேர் மட்டுமே உள்ளனர் என்றும், அதுவும் முறையாக இந்த குழு நியமிக்கப்படவில்லை'' என்றும் வாதாடினார். சிறையில் நன்னடத்தை அதிகாரி பரிந்துரை செய்தும், ஆலோசனை குழு அந்த பரிந்துரையை ஏற்காதது தவறு என்றும் அவர் வாதாடுகையில் குறிப்பிட்டார்.

ஆயுள் தண்டனை என்பது 20 ஆண்டாக இருந்தாலும் சிறை விதிமுறைப்படி 14 ஆண்டுகள் இருந்தாலே முன்கூட்டியே விடுதலை செய்ய ஆலோசனை குழு தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யலாம் என்றும் வக்கீல் துரைசாமி வற்புறுத்திக் கூறினார்.

இதன்பிறகு அரசு தரப்பு வக்கீலை பார்த்து, இதற்கு விளக்கம் அளிக்கவேண்டும் என்று நீதிபதி தெரிவித்தார்.மனுவை விசாரணைக்கு அனுமதித்து, இதுபற்றி பதில் தருமாறு மத்திய, மாநில அரசுகளுக்கும், ஆலோசனைகுழு, சிறைத்துறை கூடுதல் டி.ஜி.பி. ஆகியோருக்கும் அழைப்பு அனுப்பும்படி நீதிபதி உத்தரவிட்டார். (அ-5)

# இலங்கை மீனவர்கள் 60பேர் இந்திய கடற்படையினரால் கைது

இலங்கை மீனவர்கள் 60 பேர் இந்தியக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்திய மீனவர்களுக்கு தற்சமயம் மீன் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் பருவ கால மீன்பிடித் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்தமான் தீவுக்கு அப்பால் வைத்தே இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மண்டபம் பகுதிக்கு அழைத்து வரப்பட்டனர். இந்த நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக இவர்கள் பொலிஸாரிடம் கையளிக்கப்படவுள்ளனர். அண்மையிலும் 12 இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப் பட்டமை குறிப்பிடத் தக்கது. (ச-5)

# பிரியங்கா சந்திப்புக்கும், நளினி மனுவுக்கும் எந்த தொடர்பும் இல்லை - காங்கிரஸ் விளக்கம்

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று வேலூர் சிறையில் இருக்கும் நளினியை கடந்த மாதம் பிரியங்கா சந்தித்துப் பேசினார். இந்த நிலையில்17 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் தன்னை விடுதலை செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி மனு தாக்கல் செய்துள்ளார்.

இதையடுத்து பிரியங்கா சந்திப்புக்கும், நளினி மனு தாக்கல் செய்ததற்கும் தொடர்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகின. இதை காங்கிரஸ் கட்சி மறுத்துள்ளது.

இது குறித்து கட்சியின் செய்தி தொடர்பாளர் ஷகீல் அகமது கூறுகையில், ''பிரியங்கா சந்திப்புக்கும், விரைவில் விடுதலை செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி மனு தாக்கல் செய்ததற்கும்இடையே எந்தத் தொடர்பும் கிடையாது. இந்த சந்திப்பினால் சட்டபூர்வமான நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படாது'' என்றார். (அ-5)

# புலிகளின் வான்தளத்துக்குத் திரும்பிய வானூர்திகள் உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்லப்பட்டன

## கொழும்பு வார ஏடு தகவல்

(கொழும்பு)

மணலாற்றில் தாக்குதலை நடத்திவிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் புதிய வான் தளத்துக்கு வானூர்திகள் திரும்பிய பின்னர் அவை மேலும் சிறிய அளவாக்கப்பட்டு உழவு இயந்திரங்களில் ஏற்றிச்செல்லப்பட்டதாக கொழும்பிலிருந்து வெளியாகும் 'த பொட்டம் லைன்' வார ஏடு தெரிவித்துள்ளது.

த பொட்டம்லைன் செய்தி ஆய்வுக் கட்டுரையில் இடம்பெற்றுள்ள தகவல்கள் இலங்கைப் படை நிலைகள் மீது விடு தலைப்புலிகள் 5ஆவது வான் தாக்குதலை நடத்தியிருந்தனர். புலிகளின் வானூர்திகளை இலங்கை விமானப் படையினால் இடை மறிக்க முடியவில்லை.

கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி விடுதலைப் புலிகளின் zlin z-143 L ரக இரண்டு இலகு ரக வானூர்திகள் முல்லைத்தீவிலிருந்து அதிகாலை 1.25 மணிக்கு முழு இருட்டில் தாழப் பறந்து புறப் பட்டன.

அதே நேரத்தில் விடுதலைப்புலிகளின் இலகு உலங்கு வானூர்தியும் விமானப் படையினரை திசை திருப்புவதற்காக இரணைமடு அருகே இருந்து புறப்பட்டது.

மணலாறு முன்னரங்க நிலைகளை அதிகாலை 1.32 மணியளவில் இரண்டு வானூர்திகளும் சென்றடைந்தன. முன்னரங்க நிலைகள் மீது இரு குண்டு களையும் சிங்கபுரப் பகுதியில் ஒரு குண்டையும் வீசிய அந்த வானூர்திகள் அதிகாலை 1.50 மணிக்கு தங்களின் தளத்துக்குத் திரும்பின. முல்லைத்தீவு முள்ளியவளையில் புதிதாக கட்டமைக்கப்பட்ட ஓடு பாதைக்கு திரும்பிய போது சில விளக்குகளை தரையிலிருந்து விடுதலைப்புலிகள் எரியவிட்டனர்.

இரு வானூர்திகளும் தரையிறங்கிய பின்னர் விளக்குகள் அணைக்கப்பட்டு வானூர்திகளும் சிறகுகளும் மடக்கப்பட்டு இரண்டு உழவு இயந்திரங்களில் அடர்ந்த வனப்பகுதிக் குள் கொண்டு செல்லப்பட்டன.

இலங்கை படைத்தரப்பின் ஆர்ட்டிலறி நிலைகளே புலிகளின் பிரதான இலக்காக இருந்தது. ஆனால் அதனை எட்ட முடியவில்லை புலிகளின் தாக்குதலில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்தார். இரணைமடு ஓடு பாதையின் மீது விமானப் படையினர் தொடர்ந்தும் குண்டுத் தாக்கு தலை நடத்தினர். ஆனால் விடுதலைப் புலிகளோ முல்லைத்தீவு நகரிலிருந்து 7 கிலோ மீற்றர் மேற்காக முள்ளியவளையில் புதிய ஓடுதளத்தைக் கட்டமைத்துள்ளனர்.

புலிகளின் வானூர்திகள் செக் தயாரிப்பு zlin z-143 L வானூர்தியாகும்.

இது 4 பேருடன் 1,000 கிலோ மீற்றர் வரை பறப்பில் ஈடுபடக்கூடியது. அதனை இருவர் மட்டும் பயணிக்கக்கூடியதாக புலிகள் மாற்றியமைத்துள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-5)

## பணவீக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பணவீக்கம் முன்னொரு போதும் இல்லாதவாறு முடிவடைந்திருக்கும் ஏப்ரல் மாதம் 25 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதனை புதிய விலைச்சுட்டெண் தெளிவாகக் காட்டியுள்ளது.

அத்துடன், பழைய அளவீடான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 29.9சதவீதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் புள்ளி விபரவியல் அலுவலகம் நேற்று முன்தினம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் 23.8சதவீதமாக பணவீக்கம் இருந்ததாக புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கணிப்பீடுகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்தொகை ஏப்ரலில் 1.8 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது.

உணவுப் பொருள்களின் விலை 1.32சதவீதம் அதிகரித்திருப்பதாக புள்ளிவிபரவியல் தகவல்கள் கூறுகின்றன.

(அ-5)

# குரங்கு அப்பம் பிரித்த கதையாக தமிழ் பேசும் சமூகங்களின் அரசியல் நிலை மாறிவிடக்கூடாது

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உரை

(கொழும்பு)

திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலே வாழுகின்ற தமிழ் பேசும்இரண்டு சமூகங்களுக்கிடையிலேயும் பலவித முரண்பாடுகள் இருக்கலாம் ஆனால் குரங்கு அப்பம் பிரித்தகதையாக தமிழ் பேசும் சமூகங்களின் அரசியல் மாறிவிடமுடியாது என சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி தலைமை வேட்பாளருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். கிழக்குமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பட்டியலில் போட்டியிடும் முஸ்லீம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்த, கடந்த வெள்ளிக்கிழமை மாலை தோப்பூரில் நடைபெற்ற மாபெரும் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பெருந்திரளான மக்கள் கலந்து கெண்டு நடைபெற்ற ஊர்வலத்தின் பின்னர் இடம் பெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டதாவது, அநியாயமான அரசுக்கு உடந்தையாக இருந்து அவர்களுடைய அக்கிரமத்தின் பங்காளியாக இருந்து தமிழ் பேசும் சமூகங்கள் அவதிப்படுகின்ற போது, அல்லல்படுகின்ற போது, அதிலே குளிர்காய்கின்ற வெறும் குள்ளநரிக்கும்பலாக முஸ்லீம்களை மாற்றி விடக்கூடாது என்கின்ற நேர்மையான அரசியல் பாரம்பரியத்தின் அடிப்படையிலே தான் முஸ்லீம் காங்கிரஸ் தொடர்ந்தும் செயற்பட்டு வந்திருக்கின்றது அதன் பிரதி பலிப்புத்தான் இந்த தேர்தலும் எமது முடிவு மாகும். இன்று இருக்கிற காலகட்டம் இந்த நாட்டின் அரசியலிலே இதற்கு முன்பு சிறு பான்மை சமூகங்கள் எதுவுமே சந்திக்காத மாபெரும் சவால்களை சந்திக்கிற ஒருகால கட்டம். இன்று நடக்கின்ற அரசியல் இதற்கு முன்பு மோசமாக ஆட்சி செய்த அரசுகளை விடவும் படுமோச மான திக்குகளிலே போகின்ற ஒரு ஆட்சியென் பதை நாங்கள் அடையாளம் கண்டிருக்கின் றோம் நான் பல அரசுகளிலே அமைச்சராக இருந்திருக்கின்றேன் என்னுடைய 14வருட கால பாராளுமன்ற அரசியலில் ஒரு அமைச்சுப் பதவியிலும் முழுமையாக ஆறு வருட காலம் இருந்த அனுபவம் எனக்குக் கிடையாது. முஸ்லீம் காங்கிரசின் தலைவருக்கு அமைச்சுப் பதவிகளிலே ஆறுதலாக இருந்து அதன் அந்தஸ்த்தை அனுபவிப்பதற்கு முடி யாது.



சமூகத்தின் உடைய உரிமைகள் சம்பந்தமாக அந்த அமைச்சரவைக்குள்ளே இருந்து போராட வேண்டிய பாரிய பொறுப்பு எங்கள் தோள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. முஸ்லீம் காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்று அமைச்சரவையில் இருக்கின்ற சோரம் போனவர்களும், இந்த அரசுக்கு காவடி யெடுத்துக் கொண்டிருக்கின்ற ஒரு கால கட்டத்தில் தான் முஸ்லீம் கங்கிரஸின் உறுப்பினர்கள் பதவிகளைத் துறந்து விட்டு தேர்தலில் போட்டியிடுகின்றனர். இந்த பதவிகளை துறந்து போட்டியிடும் நிகழ்வு யாரும் வற்புறுத்திச் செய்த விஷயமல்ல கட்சியின் எந்தவொரு உறுப்பினரினதும் வேண்டுகோளின் பெயரில் தலைமை செய்த விஷயமல்ல எல்லாம் வல்ல இறைவனின் நாட்டத்தின் பேரில் நான் தனிப்பட எடுத்த தீர்மானத்திற்கு கட்சியின் உயர் பீடம் அங்கீ காரம் தந்ததே தவிர முடிவையெடுக்க வில்லை.

ஏனெனில் நான் மக்களுக்காக, சமூகத்திற்காக வகிக்கின்ற இந்த அந்தஸ்து மக்களுக்காகவே சமூகத்திற்காகவே பாவிக்கப்பட வேண்டும் ஒரேயொரு முறைதான் எனக்கென்று நான் நியமனப்பத்திரம். தாக்கல் செய்திருக்கின்றேன். மற்ற யெல்லா சந்தர்ப்பங்களிலும் தலைவர் என்ற ரீதியில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்து அதன் பின்னர் முஸ்லீம் காங்கிரஸின் தலைவர் என்கின்றஅந்தஸ்த்தை மக்கள் மிக உச்ச நிலையிலே வைத்து அங்கீகரித்திருக் கின்றார்கள். அதிலே இருக்கின்ற மிகப்பெரிய நம்பிக்கை எந்த அச்சுறுத்தல்கள் வந்தாலும் எப்படியான அடாவடித்தனங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந் தாலும், அதையெல்லாம்துச்சமாக மதித்து பதவி களைத் தூக்கியெறிந்து இந்த போராட்டத்திலே மக்களுக்கு சரியான தலைமைத்துவத்தை வழங்கவேண்டுமெனதைரியத்தை இறைவன் இந்த இயக்கத்திற்கு தந்திருக்கின்றான்.

(அ-5)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

நல்லூர் அரசடி வீதி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 60ஆவது நிறைவு (வைரவிழா) விழாவை முன்னிட்டு நடைபெறவுள்ள கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் தத்தமது விண்ணப்பங்களை 08.05.2008 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் எமது நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகத்தினர்
ஜனசக்தி சனசமூக நிலையம்.

அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே.இல 0776411536

(1140)

# முகமாலையில் பாரிய முன்நகர்வை....

(நேற்றைய தொடர்ச்சி)

அங்கே களத்தில் நிற்கின்ற உங்கள் உடன் பிறப்புக்கள்-பிள்ளைகள் மீண்டும் அங்கே வரலாறு எழுதுவார்கள். அவர்களுக்கு அந்தப் பாடம் புரியும் வரை இறுதிவரை எங் களின் உரிமை நிலைநாட்டுப்படும் வரை அதனைச்செய்கின்ற திடசங்கற்பத்தோடு நாம் தொடர்ந்தும் போராடுவோம். இந்தப் போராட்டத்தை கட்டமைத்த தொடக்கத்தில்- அதனை வடிவமைக்கும் போதே- அதற்கான அத்திவாரத்தை அமைக்கும் போதே- எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பு நடக் கக்கூடிய விடயங்களை எல்லாம் மனதில் கொண்டு அந்த அத்திவாரத்தை எமது தேசியத்தலைவர் அமைத்து வந்தார்.

விடுதலைப் போராட்டத்திற்கான உதவியை, ஆதரவை எங்கிருந்தும் பெறலாம். ஆனால் விடுதலைப் போராட்டம் எந்த உதவியிலும் ஆதரவிலும் தங்கியிருக்காது என்கின்ற அந்த உறுதியான நிலைப்பாட்டை- அந்த தீர்க்கமான சிந்தனையை அந்தத் திண்ணியக் கருத்தியலை அந்த அத்திவாரத்தில் எமது தேசியத் தலைவர் இட்டு வைத்திருக்கின்றார். விதைத்திருக்கின்றார்.

அதனால் நாங்கள் இன்று வரை தலை நிமிர்ந்து நிற்கின்றோம். அடக்குமுறை அரசுக்கு உதவ இன்னும் ஆயிரம் அரசுகள் இருக்கும் ஆனாலும் எமது போராட்டம் நசுக்கப்பட்டதா? அந்த வல்லரசு இங்கு வந்த போது கூட என்ன நடந்தது? மாறி, மாறி வரும் ஆட்சியாளர்கள் தமது போர்த் திறனைக் காட்டுவதற்கு வீறு கொண்டு எழுந்த போது இங்கு என்ன நடந்தது?

ஜெயசிக்குறு சமரைப் பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. கண்டி வீதியில் இருந்து மாங்குளம் வரை அவர்கள் வந்தார்கள். கிளிநொச்சி அல்லது ஆனையிறவை அடையவேண்டிய சூழ்நிலையில் அவர்கள் நேரே வரக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. ஒட்டுசுட்டானில் இருந்து பள்ள மடுவரை அவர்கள் விரிந்தார்கள்.

கொழும்பு ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலை தனது போர் உத்திகளின் மூலமும் ஆழமான தீர்க்க சிந்தனைகளின் மூலோபாயத்தின் மூலமும் தனது நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு வருவதில் கைதேர்ந்தவர் தான் எமது தேசியத் தலைவர்.

அன்று அவர்களின் நிகழ்ச்சி நிரலை தனது நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கி அதனை முற்றிலும் முறியடித்துக் காண்பித்தார். அதே மண்ணில் இன்று அதே வரலாறு மீட்கப்படுகின்றது. எமது போராளிகள் அந்த வீர சரித்திரத்தை இன்று களங்களில் நின்று எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

அந்தப் போராளிகளின் உழைப்பு என்பது உண்மையில் இந்த நாட்களில் ஒரு வரலாறு காணாத உன்னத நிலையில் இருக்கின்றது என்பதனை இந்த இடத்தில் சொல்லிக்கொள்கிறேன். திடீரென ஏற்படுகின்ற கொடிய மழை காவல் அரணுக்குள்ளே பல சிரமங்களை ஏற்படுத்துகின்றது என்பதனைச் சொல்லாமலே உங்களுக்குப் புரியும்.

உங்களின் உடன்பிறப்புக்கள் தீரமுடனும் உறுதியுடனும் உங்களைப் பற்றிய உங்களின் எதிர்காலம் பற்றிய நல்ல எண்ணங்களுடனும் அங்கு அவர்கள் போராடுகின்றனர் என்பதனையும் உங்களிடம் சொல்கின்றேன். ஒரு நல்ல பூ விரியும்போது எவ்வாறு அந்த நறுமணம் மற்றவர்களை மகிழ்விக்கின்றதோ-

ஒரு நல்ல கவிஞனின்,

ஒரு நல்ல எழுத்தாளனின் பேனா குனியும் போது எவ்வாறு நல்ல கருத்துக்கள் பிறக்கின்றனவோ ஒரு நல்ல கலைஞனின் தூரிகையில் இருந்து எவ்வாறு நல்ல படைப்புக்கள் உண்டாகின்றதோ அதேபோல் நல்ல போராளிகளின் துப்பாக்கிகளில் இருந்து அவர்கள் தூக்குகின்ற ஆயுதங்களில் இருந்து இலட்சியம், விடுதலை சுதந்திரம் என்பது பிறக்கும். அதுதான் வரலாறு.

இங்கு பாடலைப் பாடிய உடன்பிறப்புக்கள்- 'ஆயுதம் வேண்டும்' என்ற கருத்தை அழகாகப் பாடினார்கள். உண்மையில் அதுதான் இன்று தேவையான விடயம்.

வன்முறையற்ற ஒரு சூழ்நிலையில் கருத்துக்கள் தான் ஆயுதம் என்றும் போர் என்று ஒரு வன்முறைநீள்கின்ற சூழ்நிலையிலேயே ஆயுதம்தான் கருத்துக்கள் என்றும் கார்ல் மாக்ஸ் சொன்னார். அந்த ஆயுதம் எப்படி எமது கைகளில் வந்தது? நாமாக விரும்பி ஏற்றுக் கொண்டோமா இல்லை. ஆயதத்தை எமக்கு நிர்ப்பந்தம் ஆக்கினார்கள் சிறிலங்கா வின் ஆட்சியாளர்கள்.

அந்த ஆயுதம் மட்டும் இல்லை என்று சொன்னால் இன்று நாம் எங்கோ நசுக்கி ஒடுக்கப்பட்டிருப்போம்.

இதனை எமது தேசிய தலைவர் அப்போதே புரிந்துவைத்திருந்தார். அந்த ஆழமான சிந்தனையின் வெளிப்பாடாக இன்று வீட்டுக்கொருவர் ஆயுதம் தரித்தல் என்கின்ற அந்த ஓர் கோட்பாட்டுக் கருத்தியல் நிலைக்கு நாம் இன்று எழுச்சிபெற்றிருக்கின்றோம். அந்த ஆயுதத்திலும் இன்று சுயசார்பு பரிமாணங்களுடன் களமுனையில் பலசாதனைகளை செய்துகொண்டிருக்கின்றன.

உங்களின் உறவுகளை நீங்கள் சந்திக்கும் போது அவர்கள் சொல்வார்கள். ஆயுதப் பரிமாணங்களிலே நாங்கள்பல சுயசார்பு, தற்சார்பு நிலைகளை அடைந்து கொண்டிருக்கின்றோம். அவ்வாறானதொரு எழுச்சி மிக்க நிலையில் எமது போராட்டம் நகர்கின்றது. அதே நேரம் சிறிலங்கா அரசாங்கமானது ஆட்சியிலிருக்கும் ஆட்சியாளர்கள் பலவகை நெருக்குதல்களுக்கும் உள்ளாகி பொருளாதார அரசியல் ரீதியாக போர் தொடர்பிலான அரசியல் ரீதியாக களமுனையில் படைத்துறை ரீதியாக வீழ்ச்சிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிற நிலை யில் உள்ளது.

இந்த வலிமையான நிலைக்கு எங்களை இட்டு வந்தவர் எமது தேசியத் தலைவர் அந்த விடுதலைப் போருக்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று எழுச்சியான பங்களிப்புகளைச் செய்து கொண்டிருக்கின்றோம். எமது சக்தியை எந்த அடக்கு முறையாளர்களாலும் எந்த நடவடிக்கைகளாலும் ஒடுக்கிவிட முடியாதென்பதற்கு இந்த மண்ணில் எடுத்துக் காட்டுக்கள் இருக்கின்றன.

புதுவித உத்திகளையும் போரியல் சார்ந்த புரட்சிகர சிந்தனையையும் நாம் மக்களிடத்திலும் கொண்டுவந்து விடுதலைப் போரில் உலகம் வியக்கின்ற அளவுக்கு உன்னதமான நிலைக்கு எம்மை இட்டு வந்திருக்கின்ற எமது தேசியத்தலைவர்அவர்களின் காலத்தில் நாங்கள் விரைந்து விடுதலை பெறுவோம் என்றார் அவர்.

(மற்றவம்)

அயலானுடைய கால் ஒடிந்த பிறகுதான் மிக நன்றாக நடக்கலாம் என்று பொறாமைக்காரன் நினைக்கிறான். —டென்மார்க்

வலம்புரி

## அடடா! சிங்கள மக்களுக்கு யுத்தத்தில் இவ்வளவு பிரியமா?

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு 16.6 வீதமான சிங்கள மக்களே ஆதரவு தெரிவித்துள்ளதாக மாற்றுக்கொள்கைக்கான அமைப்பின் கணக்கெடுப்பிலிருந்து தெரியவந்துள்ளது.

அதாவது, இலங்கை அரசு முன்னெடுக்கும் யுத்த நடவடிக்கைக்கு சிங்கள மக்களின் ஆதரவு மேலும் அதிகரித்துள்ளதாக அந்த அமைப்பின் கணக்கெடுப்பிலிருந்து தெரியவருவதாக கூறப்படுவது அதிர்ச்சிதரும் செய்தியாகும்.

ஏனெனில் நாட்டில் யுத்தம் காரணமாக மனித உயிர்கள் அழிந்தவண்ணமுள்ளன. இதில் இன, மத பேதம் கிடையாது.

வன்னிப் பகுதியில்-விமானக் குண்டுத்தாக்குதல் இடம்பெறுகின்றது. அரசு இந்த நாசகார செயலை மேற்கொள்கின்றது.

விமானக் குண்டுத்தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் உயிரிழக்கும்போது அவர்களை பயங்கரவாதிகள் என அரசு கூறும் அப்பட்டமான பொய் உலகறிந்ததாயினும், நாட்டில் நீதி நிர்வாகத்தை இன, மத பேதமின்றி நடத்தவேண்டிய அரசு அப்பட்டமாகப் பொய்கூறி கொள்ளலாமா? என்பது வேறு விடயம்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக அரசின் யுத்த முயற்சியை எண்பது வீதத்துக்கு மேற்பட்ட சிங்கள மக்கள் ஆதரிப்பதாக மாற்றுக் கொள்கைக்கான அமைப்பின் கணிப்பீடு தெரிவிப்பது, கணிப்பீட்டிலுள்ள தவறா? அல்லது உண்மையிலேயே சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்புகிறார்களா? என்ற முடிவுக்கு நாம் வருவதில் பல இடர்பாடுகள் உண்டு.

பொதுவாக கணிப்பீடுகள் முழுமையானவை அல்ல. அவை பக்கச்சார்பாகவும் உண்மையை வெளிப்படுத்தக் கூடியவையாகவும் இல்லை என்ற கருத்து இருக்கவே செய்கிறது.

இந்நிலையில் கணிப்பீட்டில் இருக்கக் கூடிய தவறெனில் அதனை அப்படியே விட்டுவிடலாம்.

மாறாக சிங்கள மக்களின் எண்பது சதவீத மானவர்கள் யுத்தத்தை ஆதரிக்கிறார்கள் எனில் அவர்கள் மனித அழிவுகளை ஆதரிக்கிறார்கள் என்றும், தென்பகுதியில் இடம் பெறும் கிளைமோர்த் தாக்குதல்களை ஏற்றுக் கொள்கிறார்கள் என்றுமே பொருள் கொள்ள வேண்டும்.

எந்த மக்களாவது தமது மண்ணில் குண்டு வெடிப்பதை –தம் உறவுகள் அழிந்து போவதை விரும்புகிறார்களா என்றால் அதற்கான பதில் இல்லை என்பதாகவே இருக்கும்.

அவ்வாறாயின் சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் யுத்தத்தை விரும்புகிறார்கள் என்ற முடிவு ஏற்புடையதல்ல.

எனவே இத்தகைய கணிப்பீடுகளை மேற்கொள்ளும் அமைப்புகள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

முரண்பாடான தரவுகளை வெளிப்படுத்தி அதனூடாக இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வை, ஒற்றுமையை சீரழிக்கக்கூடாதென் பது தாழ்மையான கோரிக்கையாகும்.

# உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ள அரசிடம் எந்தவிதமான முன்னேற்பாடுகளும் இல்லை

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஏற்படப்போகும் உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்வதற்காக உலகமே பல்வேறுதிட்டங்களை முன்னெடுக்கின்றது ஆனால் இலங்கை அரசாங்கம் எதுவிதமான முன்னேற் பாடுகளையும் மேற்கொள்ளாது பெயரளவில் திட்டங்களை பெயர்ப்பலகைக்கு வரையறுத் துள்ளது. எதிர்வரும் மாதங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும் என்று ஜே.வி.பி பொதுச் செயலாளர்ரில்வின்சில்வாஎச்சரிக்கைவிடுத்தார்.

அரிசிவிலையேற்றம், எதிர் காலத்தில் எதிர்நோக்கவுள்ள உணவுப் பஞ்சம் தொடர்பாக கருத்துத்தெரிவிக்கையிலேயே ஜே.வி.பி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது,

குறிப்பிட்ட சில நெல் ஆலை உரிமையாளர்கள் அரிசியின் ஏக போக உரிமையை தம்வசம் வைத்திருப்பதாலேயே இன்றைய விலையேற்றமும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளன. அரிசியை கொள்வனவு செய்து விநியோகிக்கும் செயற்பாட்டை அரசாங்கம் கைவிட்டுள்ளது. எனவே தனியாரின் வசம் ஏகபோக உரிமை சென்றுவிட்டதால் போட்டி போட முடியாமல் உள்ளது. இதற்கு அரசாங்கத்தின் பிழையான நடவடிக்கையே காரணமாகும்.

அரசாங்கம் கடந்த வருடம் அரிசி உட்பட சில பொருட்களை அத்தியா வசியப் பொருட்களாக வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தது. அதற்குள் கட்டுப்பாட்டு விலையும் அடங்கும்.

ஆனால் அண்மையில் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை அறிவித்த கேலிக்கூத்தான நடவடிக்கையால் பாரிய நெருக்கடி தோன்றியுள்ளது. உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் எதுவிதமான திட்டமும் கிடையாது நாம் பயிரிடுவோம் நாட்டை அபிவிருத்தி செய்வோம் என்ற திட்டம் அரசாங்கத்தின் பெயரளவிலான விழாக்களுக்கு மட்டுமே வரையறுக்கப் பட்ட திட்டமாகும்.

அரிசி உற்பத்தி, மரக்கறி உற்பத்தியை அதிகரிக்க எதுவிதமான திட்டங்களும் இல்லை. உலகமே உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ள பல்வேறு முன்னேற்பாடுகளை முன்னெடுக்கின்றது. ஆனால் எமது அரசாங்கம் எதுவிதமான திட்டங்களையும் முன்னெடுக்காது இருக்கின்றது.

விலைவாசி உயர்வு குறைக்கப் படவேண்டும். அரிசி ஏகபோக உரிமை நீக்கப்படவேண்டும் எதிர்கால உணவுப்பஞ்சத்தை எதிர்கொள்ள திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என அர சாங்கத்தை வலியுறுத்தி மக்களோடு வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்தப் போகின்றோம் என்றார். (அ-5)

# மக்களின் ஆதரவே எமக்குத் தேவை ஐக்கிய தேசியக் கட்சியினுடையதல்ல

## தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவு தமக்குத் தேவையில்லையென பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயுதங்களையோ அல்லது ஏனைய பலங்களையோ பயன்படுத்தாமலேயே எதிர்வரும் தேர்தலில் ஜனநாயக ரீதியில் போட்டியிட இருப்பதாக அவர்கள் கூறுயுள்ளனர். தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் அவர்கள் ஜனநாயக ரீதியில் செயற்படுவதற்கு ஆதரவு வழங்கப்படுமென திருகோணமலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க கூறியிருந்தார். இதற்குப் பதிலளித்திருக்கும் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஆசாத் மௌலானா, வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயுதங்கள் பயன்படுத்தப்படமாட்டாது எனத் தெரி வித்துள்ளார்.

ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் எமது நிலைப்பாட்டை மீண்டும் மீண்டும் தெளிவாகத் தெரியப்படுத்தியுள்ளோம். மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் போன்று மாகாண சபைத் தேர்தலிலும் ஜனநாயக ரீதியில் போட்டியிடுவோம் என ஆசாத் மௌலானா கொழும்பு ஊடகமொன்றிடம் கூறியுள்ளார்.

எமக்குத் தேவையானது எல்லாம் என்னவென்றால் மக்களின் ஆதரவே ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவு அல்ல மக்களின் முழு ஆதரவும் இருந்தால் போதும் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் நலனில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு உண்மையான அக்கறை இருக்குமாயின், அவர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வோம் ஆனால், அவர்கள் விடுதலைப்புலிகளின் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமையவே செயற்படுகின்றனர் என தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார். (அ-5)

# பிலியந்தலை குண்டுத் தாக்குதல் தொடர்பில் முக்கிய சந்தேக நபர் பொலிஸாரால் கைது?

(கொழும்பு)

பிலியந்தலையில் இடம்பெற்ற பஸ் குண்டுத்தாக்குதல் தொடர்பான முக்கிய சந்தேகநபர் உட்பட மூவரை பிலியந்தலை பொலிஸ் நிலையத்தின் விசாரணைப் பிரிவு கைது செய்துவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. சிங்கள இளைஞர் ஒருவரும் நுவரேலியாவைச் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்களுமே கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரே முக்கிய சந்தேக நபர் எனவும் தூரத்தில் இருந்து இயக்கும் கருவி மூலம் இயக்கக் கூடிய குண்டு ஒன்றை தான் வெடிக்க வைத்ததாக அந்த முக்கிய சந்தேக நபர் ஒத்துக்கொண்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிலியந்தலை, தெல்தர பகுதியிலுள்ள சிங்கள இளைஞர் ஒருவரின் வீட்டில் கடந்த மூன்று கிழமைகள் அந்த இளைஞர் வசித்து வந்துள்ளார்.

நுவரெலியாவைச் சேர்ந்த மற்றும் ஒரு தமிழ் இளைஞர் பிலியந்தலையில் வேலை செய்து வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியாவைச் சேர்ந்த இளைஞர் தெல்தரையில் வசித்து வந்த இளைஞ ருடன் மிகவும் நெருக்கமாகப் பழகிவந் துள்ளார். வேலையற்ற சிங்கள இளை ஞருக்கு தனது வீட்டில் குண்டை வைத்திருப்பதற்காக 50 ஆயிரம் ரூபா வழங்கப் பட்டுள்ளதாகவும் முக்கிய பிரமுகர் ஒருவரை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் நோக்கிலேயே குண்டு எடுத்து வரப்பட்டு வாகனம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 25ஆம் திகதி சிங்கள இளைஞரும் மற்றைய தமிழ் இளைஞர்கள் இருவரும் பிலியந்தலை பஸ் நிலையத்திற்குச் சென்று கஹபொல செல்லும் பஸ்சில் குண்டை வைத்திருந்ததாகவும் பஸ் புறப்பட்டதும் தூரத்தில் இருந்து இயக்கும் கருவி மூலம் பிரதான சந்தேக நபர் குண்டை வெடிக்க வைத்திருப்பதாகவும் பிலியந்தலைப் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். (அ-5)

# வெள்ளி நற்சிந்தனை 18

## பக்தியின் மொழி தமிழ்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

உலகம் எங்கும் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டிப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தவராகப் போற்றப்படுகின்றனர். பசி தீர்க்க வேண்டும் என்னும் எண்ணம் எல்லோருடைய உள்ளத்திலும் நிலைபெற்று இருக்க வேண்டும். வறுமையால் வாடுவோரின் பசியைப் போக்க வழிபாட்டு நிலையில் 'அன்னதானம்' என்னும் நடைமுறை உண்டு.

முற்காலத்தில் கால்நடையாகப் பயணஞ் செய்வோருக்கு நீர் வழங்கத் தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்கும் வழக்கம் இருந்தது. திருக்கோயில்களிலே திருவிழா நடைபெறும் காலங்களில் வழிபட வருவோரின் வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்குச் சோறும் தண்ணீரும் வழங்கப்படும். எனவே வழிபாடு வயிற்றுப்பசியையும் தீர்க்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே அக் காலத் தில் நிலைத்திருந்தது.

கோயில் வழிபாட்டையும் பக்தி உணர்வையும் மக்கள் அறிய வழிகாட்டியவர்கள் நாயன்மார்களாவர். இறைவனை முழு மனதோடு வழிபட்டால் விரும்பிய யாவற் றையும் பெறலாம் எனக் கூறிய நாயன் மார்கள் கோவிலில் உறையும் இறைவனைப் பற்றிப் பாடும் போது இரண்டு முக்கியமான விடயங்களைக் குறிப்பிட்டுள்ளனர். மக்கள் வாழ்வியலில் துன் பந்தருகின்ற பசியையும் பிணியையும் போக்க இறைவழிபாடே சிறந்தது என எடுத்துரைத்தனர்.

இறைவனின் இயல்புகளைப் பாடும் சுந்தரர் இவ்விரு நிலைகளையும் எடுத்துக் கூறியுள்ளார். இறைவன் தன்னைப் பாடுபவருடைய பசியைத் தீர்ப்பான். பரவுபவர்களுடைய பிணிகளை நீக்கு வான். தானே ஓட்டைக் கையிலேந்திப் பிச்சைக்காக அலை வான். இக்குணம் மனிதருக்கும் இன்றிய மையாதது பிச்சையெடுக்கும் நிலை யிலும் பிறருடைய வயிற்றுப் பசியைப் போக்கும் கொடையுள்ளம் தேவை.

காட்டையே தனக்கு வாழும் இடமாகக் கொண்டு நள்ளிருளிலே நடமாடும் வேடனாகத் தோன்றும் இறைவனின் இயல்பு மக்களை வழிப்படுத்தும் தன்மையது. ஆடம்பரமான வாழ்வை விடுத்து எளிமையான வாழ்க்கை வாழ்வதே சிறந்தது. பிறருக்கென உழைக்கும் மனம் வேண்டும். 'திருக்குருவாவூர் வெள்ளடை' என்னும் தலத்திற்குச் செல்லும் வழியிலே அவரது பசியும் தாகமும் தீர்க்க இறைவன் வழிசெய்திருந்தான். சுந்தரர் அதைவியந்து பாடுகிறார்.

'பாடுவார் பசி தீர்ப்பாய் பரவு வார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண் பலிக்கு உழல்வானே
காடு நின்னிடமாக கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே'

# அரசின் அடக்கு முறைக்கு எதிரான போராட்டங்கள் தொடரும்

## க.வே. பாலகுமாரன் உரை

(கிளிநொச்சி)

அரசின் அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராகவும் தொடர்ந்து போராடுவோம் என்று இன்றைய மே நாளில் உறுதியேற்போம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற மே தின நிகழ்வில் அவர் கூறியதாவது. தொழிலாளர் நாள் என்பது ஓய்வு நாள் அல்ல. எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நாள். அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக குரல் எழுப்பும் நாள்.

எமது மண்ணிலும் பேரினவாத சக்திக்கு எதிராக அதன் அடக்குமுறைக்கு எதிராக குரல் எழுப்பி போராடும் நாளாக உள்ளது. எமது மண்ணில் இலங்கை அரசின் செயற்பாடுகளினால் இன்றைய தொழிலாளர் நாளினைக் கூட எமது மக்கள் நலன்புரி நிலையங்களிலும் மர நிழல்களிலும் வாழும் சூழலை உருவாக்கி தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை சிதைக்கின்ற செயலில் அரசு ஈடுபட்டுள்ளது.

அரசின் அடக்கு முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் எதிராகவும் தொடர்ந்து போராடுவோம் என்ற உறுதியை இன்றைய தொழிலாளர் நாள் எல்லோருக்கும் உணர்த்த வேண்டும் என்றார். (எ-5)



சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மே தினப் பேரணியில் கலந்து கொண்ட ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல பிரமுகர்களை படத்தில் காணலாம்.

## இலங்கையில் வன்முறைகள்...

வானவர்கள் இடம்பெயர்ந்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இரண்டு தரப்பினரும் கடந்த வருடம் முழுவதும் மோதல்களில் ஈடுபட்டுள்ளனர். நவம்பர் 28 ஆம் திகதி சமூக சேவைகள், சமூக நலன்புரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்துத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் பொதுமக்களை இலக்கு வைத்துப் பல பஸ் குண்டுத் தாக்குதல்களும் புகையிரதக் குண்டுத் தாக்குதல்களும் நடத்தப்பட்டிருப்பதாக அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் கடந்த நவம்பர் 2 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விமானப் படையினரின் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டமையையும் அமெரிக்கா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கருணா குழுவினரின் முன்னாள் தலைவர் கருணா அம்மான் லண்டனில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிள்ளையான் தலைவராகச் செயற்பட்டு வருவதுடன் கருணா தரப்பினரின் முழுக் கட்டுப்பாட்டையும் அவரே எடுத்துக் கொண்டுள்ளார் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஜூலை மாதம் கிழக்கு மாகாணத்தைத் தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த இலங்கை அரசாங்கம் தனக்குள் காணப்பட்ட அரசியல் குளறுபடிகள் காரணமாகத் தேர்தலை நடத்துவதற்கோ அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கோ முடியாதிருந்தது.

எனினும் இலங்கையின் வடக்கின் சில பகுதிகளை விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அவற்றை மீட்கும் நடவடிக்கைகளை கடந்த நவம்பர், டிசம்பர் பகுதிகளில் இலங்கை அரசாங்கப் படைகள் ஆரம்பித்துள்ளன.

விடுதலைப்புலிகளும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வரும் துணை இராணுவக் குழுக்களும் ஆட்கடத்தல்கள்,படுகொலைகள் போன்ற மனித உரிமை மீறல் சம்பவங்களை முன்னெடுத்து வருவதாக மனித உரிமை அமைப்புக்களும் கண்காணிப்பாளர்களும் கூறியிருப்பதாக அமெரிக்கா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கருணா தரப்பினர் சிறுவர்களைப் படையில் இணைத்துக் கொள்வதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருப்பதாக 2007 ஆம் ஆண்டின் பயங்கரவாதம் தொடர்பாக அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கை தொடர்பாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-5)

## பேச்சுவார்த்தையே சரியான...

தான பஸ்தரிப்பு நிலையத்தில் இடம்பெற்ற போது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் எஸ்.கேதீஸ்வரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேதினக் கூட்டத்தில் முன்னதாக அட்டன் மல்லிகைப்பூச்சந்தியில் கூடி ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் ஊர்வலமாக அட்டன் பஸ் நிலையத்தை வந்தடைந்தனர்.

ஊர்வலத்தில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான்,பிரதி அமைச்சர்களான முத்துசிவலிங்கம்,எஸ்.கேதீஸ்வரன், எம்.சச்சிதானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்ற இம் மேதினக் கூட்டத்தில் தொடர்ந்து பேசிய அமைச்சர் ஆறுமுகன் மேலும்கூறியதாவது.

இன்று இங்கு நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருப்பது மேதினக் கூட்டமல்ல. இ.தொ.கா. மீது வைத்துள்ள தோட்டத் தொழிலாளர்களின் நம்பிக்கைக் கூட்டமாகும். இ. தொ.கா. மீது மக்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். அதேபோல் இ.தொ.கா. மக்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றது என்றார். (எ-5)

## யுத்தத்தை நடத்துவதன்...

சிலைக்கருகில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

பிரேமதாசாவினால் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவதாகவும் மனித உரிமைகளை மீறுவதாகவும் பக்கம் பக்கமாக செய்திகள் வெளியிட்டு வெளிநாடுகளிலுள்ள அமைப்புக்களிடம் புகார் செய்து, கறுப்புப் பட்டி அணிந்து ஊடகவியலாளர்களின் மாநாடுகளில் கலந்து கொண்டு எதிர்ப்புத் தெரிவித்தனர்.இன்று நாட்டில் இடம்பெறும் நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் மௌனமாகிவிட்டனர். விமர்சனங்களைக் கைவிட்டுள்ளனர். அதிகாரத்திற்கும் பணத்திற்கும் அனைத்தும் இன்று அடங்கிப் போயுள்ளன.

நாட்டில் ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்து, கம் உதாவத் திட்டத்தின் மூலம் கிராமங்களை அபிவிருத்தி செய்து, வீட்டுத் திட்டங்களை அமைத்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு சென்ற தலைவரை மறந்து விட்டனர்.

இவற்றால் நன்மைகளைப் பெற்றோர் குறைந்தது பத்திரிகைகளில் நினைவஞ்சலியைச் சரி பிரசுரித்திருக்க வேண்டும். அதுவும் இல்லை. அத்தோடு அவரைப் பற்றிய கட்டுரைகளும் எழுதப்படவில்லை.

யுத்தத்தினால் மட்டும் பயங்கரவாதத்தை வெற்றி பெற முடியாது. ஏதோ ஒரு அநீதி ஏற்பட்டமையாலேயே பிரச்சினை தோன்றியுள்ளது என்ற நியாயத்தை பிரேமதாச புரிந்திருந்தார். யுத்தத்தையும் அதேநேரம் அரசியல் தீர்வையும் இணைத்து வியூகம் வகுத்து அவர் செயற்பட்டார்.

அவரது சேவையை மறக்காது, மனிதாபிமானத்துடன் ஊடகங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்றார். (எ-5)

## ஐ.தே.கவுக்கு அளிக்கும் வாக்குகள்...

பிரபாகரனின் பயங்கரவாதத்திலிருந்து விடுதலை பெற்று சமையலறை யுத்தத்திற்கும் விரைவில் முடிவு கட்டுவோம். கிழக்கு மாகாண மக்களுக்கு ஜனநாயகத்தினைப் பெற்றுக் கொடுத்துள்ள அரசாங்கம் விரைவில் வடபகுதி மக்களுக்கும் விடுதலையினைப் பெற்றுக் கொடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தெஹியத்த கண்டியில் நேற்று நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

தெஹியத்த கண்டி மகாவலி விளையாட்டு மைதானத்தில் நேற்றுப் பிற் பகல் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் கூட் டத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். தொப்பிக்கலமலை போன்று அமைக்கப்பட்ட மேடையிலிருந்து உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது;

உலக தொழிலாளர் தினமான மேதினக் கூட்டத்தில் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலிருந்து மக்கள் மத்தியில் உரையாற்றுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டு இந்த மக்களுக்கு ஜனநாயகம் மற்றும் வாழும்உரிமை என்பவற்றைப் பெற்றுக் கொடுத்த படையினருக்கு இந்தக் கூட்டத்தில் நான் கௌரவமளிக்கின்றேன்.

வடக்கிலிருந்து விரட்டப்பட்ட சிங்கள - முஸ்லிம் மக்கள் இன்னமும் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். கிழக்கு மக்கள் சுதந்திரமாக வாழவும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவும் விவசாயிகள் விவசாயம் செய்வதற்கும் இடமளிக்கப்பட்டதுபோல் வடக்கு மாகாண மக்களுக்கும் விரைவில் அதனைப் பெற்றுக் கொடுப்போம்.

கிழக்கு மாகாண மக்களுக்கு மாகாண சபை அதிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் கிழக்கைப் பிரபாகரனுக்கு மீண்டும் வழங்க மாட்டோம் என்பதை மக்கள் இந்தத் தேர்தலின் மூலம் நிரூபிக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் செலுத்துகின்ற ஒவ்வொரு வாக்கும் பிரபாகரனுக்குப் போடும் வாக்குகளாகும். அதனால் எதிர்வரும் 10 ஆம் திகதி கிழக்கு மாகாண மக்கள் சரியான தீர்ப்பு வழங்குவார்கள்என்ற நம்பிக்கை அரசாங்கத்திடமுள்ளது.

கிழக்கின் உதயத்தின் மூலமாக கிழக்கில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றை மேலும் விஸ்தரிப்பதற்கு கிழக்கு மாகாண மக்களது ஒத்துழைப்புத் தேவையாகும்.

வடக்கு மாகாண மக்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக படையினர் நாளுக்கு நாள் முன்னேறி வருகின்றனர். வடக்கு மக்களை மீட்பதற்கும் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (எ-5)


## அறிவித்தல்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய பிரதம குருவாக சிவப்பிரம்மஸ்ரீ இ.விக்னேஸ்வரக் குருக்கள் அவர்களே தொண்டாற்றி வருகின்றார் என்பதனை முருகன் அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- 06.04.2008 ஞாயிறு வலம்புரிப் பத்திரிகையில் 5 ஆம் பக்கத்தில் பிரசுரமான (பிரதம குரு மஞ்சவனப்பதி கொக்குவில்) என்பது தொடர்பாக சிலரிடையே தவறான கருத்து நிலவுவதனைத் தவிர்க்கும் பொருட்டே இதனைப் பிரசுரிக்கின்றோம்.

ஆலயத் தொண்டில்

கா.பாலசுப்பிரமணியம் — தலைவர்

இ.இராசலிங்கம் — செயலாளர்.

கொக்குவில்
மஞ்சவனப்பதி முருகன் ஆலய
தர்மகர்த்தா சபை

(C-1081)


## மணலாற்றில் மோதல்...

ஒருவர் படுகாயமடைந்தார்.

இதேவேளை வவுனியாவில் பனிச்சங்குளம் பகுதியில் கண்ணிவெடியில் சிக்கி படையினர்இருவர் கொல்லப்பட்டுள்ளனர். படையினரின் உழவு இயந்திரம் ஒன்று நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு பனிச்சங்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது கண்ணி வெடியில் சிக்கியது. (எ-5)

## இலங்கை விவகாரத்...

இலங்கை கடுமையான உள்நாட்டுப் போர் நடக்கும் நிலையில் அங்கு ஓர்அரசாங்கமே மக்களின் மீது தாக்குதல்களை நடத்துகின்றது என்று குற்றஞ்சாட்டும் இராமச்சந்திரன் இந்த விடயத்தில் தமிழக சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூட பிரச்சினையின் முழுமையை உணர்ந்து மேற் கொள்ளப்பட்டதாக இல்லை என்று கூறியுள்ளார். (எ-1)

## கிளைமோர்த் தாக்கு...

கிளைமோர்த் தாக்குதலில் தமது தரப்பினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.இதனிடையே கிளைமோர் பொருத்திய 2 கெரில்லாக்களைத் தாங்கள் சுட்டுக்கொன்ற தாகச் சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். (எ-5)

## வடக்கு...

இந்தக் குழுவின் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழோசைக்குத் தெரிவித்தார்.

ஏற்கனவே திட்டமிடப்பட்ட பல பணிகளை இந்தக் குழு நிறைவேற்றும் என்றும் அவர் கூறினார். (எ-1)

## இல.மனித...

னெடுக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்வு முயற்சிகளை வரவேற்கிறோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் தனது முயற்சிகளை மேலும் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டியது அவசியமானது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜப்பானியப் பிரதமர் ஜசூவோ பக்கூடா, ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர். ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உட்பட பலர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். (அ-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.